கலாசிந்தாமணி

“ அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு ”
—திருக்குறள்.

புத்தகம் 3	காளயுத்தி ௵ வைகாசி ௴ மே ௴ 1918	சஞ்சிகை. 8

கடவுள் வணக்கம்

உலக மாயையி லேயெளி யேன்றனை
யுழல விட்டனை யேயுடை யாயருள்
இலகு பேரின்ப வீட்டினி லென்னையும்
இருத்தி வைப்பதெக் காலஞ்சொ லாயெழில்
திலகவாணுதற் பைந்தொடி கண்ணிணை
தேக்க நாடகஞ் செய்தடி யார்க்கெலாம்
அலகி லாவினை தீர்க்கத் துசங்கட்டும்
அபப னேயரு ளானந்தச் சோதியே.

பொறியிற் செறியைம் புலக்கனியைப்
புந்திக் கவராற் புகுந்திழுத்து
மறுகிச் சுழலு மனக்குரங்கு
மாள வாளா விருப்பேனோ
அறிவுக் கறிவாய்ப் பூரணமா
யகண்டா னந்த மயமாகிப்
பிறிவற் றிருக்கும் பெருங்கருணைப்
பெம்மா னேயெம் பெருமானே.

—தாயுமானவர்.

1918ஆம் மே - ஜூன்மீ

காளயுக்தி ஆம் வைகாசி மீ

கே	ர-கு	பு	சு
ச	மேமீ 15உக்கு ராசி.		
கு			
			ரா

உத்தராயணம் சிசிருது	பசலி 1326 1327	சாலி 1840
கொல்லம் 1092	கலியுகம் 5019	ஹிஜரி 1335.

யோகம்.	இங் மீ	தமிழ் மீ.	வாரம்	திதி, நக்ஷத்திரம், முதலியன.
ம	14	வைகாசி மீ 1	செ	சௌ 19-23, திருவா 28-4, ரா 26-56.
சி	15	2	புத	பஞ் 18-53, புனர் 29-29, ரா 18-18.
அ	16	3	வி	ஷஷ 19-38, பூசம் 31-58
ம	17	4	வெ	ஸப் 21-9, ஆயி 36-2, தி 6-8.
அ	18	5	சனி	அஷ் 24-49, மக 40-59 தி 8-5.
சி	19	6	ஞா	நவ 28-55, பூரம் 46-50, தி 2-56.
சி	20	7	திங்	தச 33-43, உத்தி 53-20, தி 6-47, சித்யோகம்
சி	21	8	செ	ஏகா 38-51, ஹஸ் 59-55, ஏகாதசி.
சி	22	9	புத	துவா 43-50, சித் 60-0, தி 22-1, பரசுராம
சி	23	10	வி	த்ர 48-18, சித் 6-12, தி 21-31. [துவாதசி
சி	24	11	வெ	சதுர் 51-53, சுவா 11-50, தி 26-56
சி	25	12	சனி	○ பரு 54-22, விசா 16-32, தி 27-7, காஞ்சி
ம	26	13	ஞா	பிர 55-35, அனு 20-6, ரா 2-36. [கருடசே
சி	27	14	திங்	துவி 55-28, கேட் 22-50, தி 32-4
அ	28	15	செ	திரி 53-55, மூல 23-32, தி 19-12 ரா 15-22
அ	29	16	புத	சௌ 51-31, பூரா 23 33, தி 10-55, காஞ்சி
சி	30	17	வி	பஞ் 47-54, உத்தி 22-14, தி 31-53. [ரதோற்
ம	31	18	வெ	ஷஷ் 43-11, திருவோ 20-6, தி 29-37.
சி	ஜூன் மீ 1	19	சனி	ஸப் 38-14, அவி 17-10, ரா 1-46.
சி	2	20	ஞா	அஷ் 32-33, சத 13-10, தி 28-1
ம	3	21	திங	நவ 26-30, பூரட் 9-44, தி 32-4. [ஆரம்பம.
அ	4	22	செ	தச 20-19, உத்தி 5-34, ரா 1-15, குருமூடம்
உ	5	23	புத	ஏகா 14-13, ரே 1-25, அசு 55-58, ரா 17-0.
சி	6	24	வி	துவா 8-22, பர 53-52, தி 19-59 [ஏகாதசி.
சி	7	25	வெ	திர 4-58, சது 53-0, * கிரு 50-57, தி 23-25
அ	8	26	சனி	● அமா 54-1, ரோ 48-49, தி 29-32.
சி	9	27	ஞா	பர 51-4, மிரு 47-10, தி 2-13.
சி	10	28	திங்	துவி 59-11, திருவா 47-35, தி 8-38.
சி	11	29	செ	திரி 48-32, புனர் 48-43, தி 18-9.
சி	12	30	புத	சௌ 49-12, பூசம் 51-13 தி 9-33. [கம்.
சி	13	31	வி	பஞ் 51-4, ஆயி 54-42, தி 25-3, சித்தியோ

மறுபிறப்பு

இவ்வுலகத்திலுள்ள மனுடர்களுட் சிலர் குருடராயும்,சிலர் முடவராயும், சிலர் செவிடராயும், சிலர் செல்வராயும், சிலர்வறியராயும் இருத்தலைக் காண்கிறோம். முற்பிறப்பிலே செய்த புண்ணிய பாவங்களே இதற்குக் காரணங்களாகும். முற்பிறப்பில்லையெனில் மனுடரைப் பலதிறப்பட உண்டாக்குதல் பரங்கருணைத் தடங்கடலாகிய கடவுளுக்கு அநீதியாகும். எந்த நிலையிலிருந்தாலும் எல்லாருக்கும் இன்பமுந் துன்பமுஞ்சமமாகவே இருக்கும். ஆதலால் அது அநீதியன்று என்று சொல்லின் உலகத்திலே பொருளீட்டல், உண்டல், கற்றல், புண்ணியஞ்செய்தல்முதலிய செய்கைகளெல்லாம் பயனற்ற முயற்சிகளாக முடியும். ஏனெனிற் பொருள் தேடல் முதலியவற்றைச் செய்யாதிருப்பினும் பாவத்தைச் செய்யினும் இன்பமுந்துன்பமுஞ் சமமாகவே இருக்கும். மரணபரியந்தம் களவுத்தொழிலை மேற்கொண்டொழுகும் ஒருவன் அததொழிலால் வந்த அற்ப இன்பத்தையும் அரசதண்டனை முதலிய வற்றால் வரும் பெருந்துன்பத்தையும் அனுபவிக்கின்றான். வேளாண்மை செய்பவன் அத்தொழிலைச் செய்தலால் வரும் அற்பதுன்பத்தையும் பின்பயனை அனுபவித்தலால் வரும் பெரும் இன்பத்தையும் அனுபவிக்கின்றான். இப்படியிருக்க இருவரும் இன்பத்தையும் துன்பத்தையுஞ் சமமாக அனுபவிக்கின்றார்களென்று சொல்வது தவறாகும். பாவஞ்செய்தவருஞ் செய்யாதவரும் இன்பதுன்பம் இரண்டனையுஞ் சமமாக அனுபவிப்பரேல், இறந்தபின்னும் அப்படியே அனுபவித்தல் வேண்டும். அது பொருந்தாது, ஆதலால் மறுபிறப்பு உண்டென்பதே துணிபாகும்.

மறுபிறப்பில்லையாயின் ஆன்மாத்தொடக்கம் உள்ளதெனக் கொள்ளல்வேண்டும். அது பொருந்தாது. ஆன்மா அநாதியாகப் பிறவி யெடாதிருந்து அப்பொழுதே பிறவி எடுத்தது என்றால், அது பிறவி யெடாதிருந்த நிலையிலே இன்பதுன்பம்இரண்டும் இல்லாதொழிந் திருத்தல்வேண்டும். ஏனெனில் அது அப்போது புண்ணியமாவது பாவமாவது செய்யமாட்டாது. அத்தன்மையிலுள்ள ஆன்மாக்களில் ஒன்றை முன்னும் வேறொன்றைப் பின்னுமாகக் காரணமின்றிப் பிறவியில் விடுத்து இன்பதுன்பங்களை அனுபவிக்கும்பொருட்டு முறையே மோட்சநரகம்

முதலியவற்றைக் கொடுத்தல் கடவுளுக்கு அநீதியாகும். இதனு லும் மறுபிறப்புண்மை நாட்டப்படும்.

ஆன்மாக்கள் புண்ணிய பாவங்கள் காரணமாக எடுக்குஞ் சரீரத்துக்கு ஏற்ப அறுவகைப்படும். அவை, புல், மரம்முதலிய ஓரறிவுயிர்கள்; இப்பி சங்கு முதலிய ஈரறிவுயிர்கள்; கறையான், எறும்பு முதலிய மூவறிவுயிர்கள்; தும்பி, வண்டுமுதலிய நாலறி வுயிர்கள்; விலங்கு, பறவை முதலிய ஐயறிவுயிர்கள்; தேவர், மானுடர்முதலிய ஆறறிவுயிர்கள்.

சரீர வேறு பாட்டால் ஒன்றினுமொன்று ஒவ்வோரறிவு மேற்பட்டிருப்பினும், ஒத்ததன்மையுடைய ஆன்மாக்களே இவ் வறுவகைப் படைப்பினுமுள்ளன. நாசியினுலறியும் அறிவினுங் கண்ணினுலறியும் அறிவு விசேடமாயிருத்தல்போல, கண்ணி னுல் அறியும் அறிவினும் சித்தத்தினுலறியும் அறிவு மேம்பட் டது. கறையான் எறும்பு முதலியவற்றினும் விலங்கு பறவை முதலியன விசேஷமாயிருத்தல்போல விலங்கு பறவையினும் மனுடன் மேன்மையுள்ளவனு யிருக்கின்றுன். இவ்வேற்றுமை அறிவின் ஏற்றத்தாழ்வுகளால் வந்ததன்றி ஆன்மாவின்உண்மை யாலும் இன்மையாலும் வந்ததன்று. பிறவிக் குருடன் உருவத் தை அறியமாட்டாமையினுலே ஐயறிவுயிரா யிருக்கின்றுன். இது சரீர வேறு பாட்டால் வந்ததன்றி ஆன்ம வேறுபாட்டால் வந்ததன்று. ஆரோக்கியமுள்ள சரீரத்தையும் நோயுள்ள சரீரத் தையும் முறையேயுடைய இருவரிடத்து முள்ள சித்தத்தாலறி யும் அறிவினும் வேற்றுமை காணலாம். அது சரீர வேறுபாட் டால் வந்ததன்றி ஆன்ம வேறுபாட்டால் வந்ததன்று.

ஆதலால் இப்பலவகைப்பட்ட சரீரங்களில் உள்ளவைகளெ ல்லாம் முற்பிறப்பிற் செய்த புண்ணிய பாவங்கள் காரணமாக வெவ்வேறு சரீரங்களை எடுத்த ஒரே தன்மையையுடைய ஆன் மாக்களாகும். கடவுள் ஆன்மாக்களை அவரவர் முற்பிறப்பிலே செய்த புண்ணிய பாவங்களின் பயன்களாகிய இன்பதுன்பங் களை அனுபவித்தற்கேற்ற சரீரங்களை உடையராக உண்டாக்கி, அவற்றை அனுபவிக்கச்செய்வர். இப்படியே உண்டாக்குதல் கடவுளுக்கு அநீதியாகாது. ஆகவே மறுபிறப்புண்மை நாட்டப் பட்டவாருயிற் றென்க.

தற்கால மாணவரியல்பு

விருத்தம்.

இளமையிற்கல்லென்றௌவை யியம்புரைநோக்கார்பெற்றோர்
வளமையிற்பணத்தைவாளா மைந்தர்க்குச்செலவிட்டந்தோ!
வுளமையிலைந்தொன்றின்பமுறும்வயதோரார்மக்கள்
களமையிற்றிரிவர்கல்லார் கற்பிப்போரென்செய்வாரே. (1)

தந்தைதாயாசான்வார்த்தை தாமறுத்திடுமாதுட்ட
மைந்தர்தாய்மலமேயென்ன வடமொழிச்சுலோகங்கூறும்
நிந்தையார்தீயமக்கணி லத்தினிலிருந்தென்செத்தெ
னந்தையாரவர்முந்நீர் சூழவனிக்கோர்பாரமாமே. (2)

பிள்ளைகளிரண்டுமூன்று பெறத்தக்கவயதுவந்த
பிள்ளைகள்படிப்பதெங்கே பிதாவுக்குக்கடனுந்தென்னம்
பிள்ளைகள்வைத்தாலைந்து பிராயத்திற்பலனுந்துட்டப்
பிள்ளைகடம்மைப்பெற்றோர் பெறுவதுவசையாமன்றே. (3)

தீர்த்தத்தின்மூழ்கச்செல்வோர் சேற்றினைப்பூசிக்கொண்டு
பார்த்தவர்நகைக்கப்போகும் பரிசுபோற்படிக்கவந்தோர்
கூர்த்தறிவுளவாசான்பாற் குறுகியுங்கல்லாராகித்
தூர்த்தராய்த்திரிந்தியாருந் தூடணஞ்செயப்போவாரால். (4)

அச்சமுநாணந்தன்னோ டறிவுமேயகத்திலில்லாக்
கொச்சையாமக்கட்பேற்றிற் குலவுமக்குடிதானென்று
மெச்சமதற்றேயேமாந் திருப்பதுநன்றேயென்றா
னிச்சகம்புகழுங்கொற்கை யிறைவரராமன்றானே. (5)

எழுத்தறிவித்தவன்றா னிறைவனுமென்பதோர்ந்தே
வழுத்துபுகுரவன்றன்னை வழிபட்டுநூல்கள்கற்போர்
விழுத்தகுசெல்வங்கீர்த்தி மேன்மையும்பெற்றுவாழ்ந்து
புழுத்துன்பொயுடலந்தீர்ந்தும் புகழுடம்போடுநிற்பர். (6)

மாணவர்கணேசன்.

நல்வழி

நல்வழி யாது? பெரியோர் தமது ஒழுக்கத்தால் நிறுத்திய நெறியேயாம். பெரியோர் என்பவர் யாவர்? எடுத்த யாக்கையின்பயனானது பரோபகாரம்புரிதலே எனக்கருதி பெரும்பான்மையும பிறர் நயத்தையே நாடுபவர்; தம்முடைய குற்றங்களுக்குத் தாமே காரணராகக் காண்பவர்; எதிர்ப்பயன் கருதாமல் எவருக்கும் தாழ்மையுடன் ஊழியஞ் செய்வதையே தமக்குப் பெருமையாகவும் கடமையாகவுங் கொள்பவர்; உலகத்திலுள்ள ஜீவர்கள் அனைவரிடத்தும் ஒருப்போல அன்பு செலுத்தி வலியார் எளியார் எனும் பகுப்பைப் பாராட்டாதவர்; நீதியான செயல்களில் விருப்பும் அநீதியானவைகளில் வெறுப்புமுற்று, நீதியைச்செலுத்தும் விஷயத்தில் நேரிடும் துன்பங்களை இன்பமாக மதிப்பவர்; தாமசெய்யுங் காரியங்களுக்குத் திருவருளின் சார்பையன்றி வேறு துணையைச் சித்தத்திற் கொள்ளாதவர்; தாம் செய்யவேண்டிய கடமைகளில் தமக்கு சுவதந்தரமும், அவற்றின் பயன்களில் பரதந்தரமுமாகிய பாவனையை யுடையவர். சுருங்கச்சொல்லில், தன்னயவிருப்புக் குறுக பிறர் நயவிருப்புப் பெருக பிறர் சார்பைப் பெரிதும் விரும்பாமல் எக்காரியங்களையும் திருவருள் நோக்கத்திற்கு இசைவித்து, தாம்கொண்ட உண்மையை இவ்வுலக பாசத்தினால் மாறவொட்டாமற் காத்துக் கொள்பவரே பெரியர் எனப்படுவர்.

பெரியராகுந் தன்மை எதனால் உண்டாம்? ஒவ்வொருவரும் தாம் செய்யும் அற்பமான காரியங்களையும் உள்ளும் புறமும் ஒற்றுமையுடன் புரிதல்வேண்டும். சிறுபிராயமுதல் அவ்வாறு பழகிவரல் வேண்டும். வித்யார்த்தியாயுள்ள சிறுவன்தன் பாடங்களைத் தினந்தோறும் ஒழுங்காகக் கற்று அவைகளிலுள்ள ஐயம் திரிபுகளை ஆசானிடத்தில் தெளிந்து கொள்வானேல் அவன் தன் வகுப்பில் இருக்கும்பொழுது தன்னுடைய ஆசிரியர் கேள்விகள் கேட்பாரோ என்று பயந்து அடுத்தபையனுக்குப் பின்புறத்தே பதுங்கல் வேண்டுமா? வேண்டாம். வெகு தீரத்தோடும் உல்லாசத்தோடும் வகுப்பிற் காலத்தைக் கழிப்பான். எதனால்? அவன் தான் செய்யக் கடன்பட்ட கடமையை உள்ளவாறே செலுத்தின தன்மையினாலேயாம். இக்கடமை தவிர அவன் தன் பெற்றோருக்கும் உற்றோருக்கும் நண்பருக்கும் செய்யவேண்டிய கடமைகளையும் உள்ளவாறே செலுத்து

வானேல் அவன் எங்கேசென்றாலும் அவனுக்கு இன்பமே யன்றித் துன்பங் கிடையாது. கடமையைச் செலுத்துகிற சுபாவமானது சிறுபிராய முதல் ஏற்பட்டால் அவனுடைய வாழ்நாள் முழுதும் அதுவே மேலிட்டு அவனுடைய சகல முயற்சிகளையும் சித்திபெறச் செய்யும்.

கடமையைச் செலுத்துவதற்குள்ள உரிமையானது சகல ஜாதியாருககும் பொதுப்பட ஏற்பட்டுள்ளது. நம் ஹிந்து மதத்தில் வகுத்த நான்கு வருணத்தாருள்ளும் தொழில் வேறுபாடு விதிக்கப் பட்டிருப்பதைத் தவிர சத்யமுதலிய சற்குணங்கள் அனைவருக்கும் ஒருங்கே கற்பிக்கப்பட் டிருக்கின்றன. அக்குணங்களை அடைவதற்கு அவரவர் தாம் தாம் முயற்சித்தால் அவை எளிதிற் பெறத்தக்கனவாம்.

திருஷ்டாந்தமாக, அறுபத்துமூன்று நாயன்மாருள்ளும், பன்னிரண்டு ஆழ்வார்களுள்ளும் அந்தணர்முதற் பறையர் ஈறாகிய பல வருணத்தவரும் காணப்படுகின்றனர். அவருள்ளும் அனேகர் கல்வித் திறமையுடையவரோ என்பது சந்தேகம். அவர்கள் முத்தி அடைவதற்குக் காரணம் என்னை? அவர்களுடைய உண்மை ஒழுக்கத்தைத் தவிர வேறின்று. நமது ஆசாரிய சிரேஷ்டராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய குலம் என்னை? வேளாளர் குலம். அவருக்குப் பெருமை எதனாற் கிடைத்தது? அவர் உள்ளும் புறமும் ஒப்ப நடந்த தீரத்தினால் அல்லவா? அம்மகான் சமண்மதத்திற் புகுந்து, பின்னர் ஞானபரிபக்குவத்தினால் சைவமதத்தைத் தழுவினார். சமண அரசனானவன் அவரைத் திரும்பவும் சமண் மதத்திற் குட்படுத்த வேண்டிப் பற்பலவாறு அவரைத் துன்பப்படுத்தினான். அந்தோ! அவரை நீற்றறையில் இட்டான்; விஷத்தைஉண்பித்தான்; மதயானைக்கு எதிரே நிறுத்தினான்; கல்லைக்கட்டிக் கடலில் விடுத்தான். என்றாலும் ஒன்றிற்கும் தளராது அவர் தாம்கொண்ட கொள்கையில் உறுதிப்பாடு கொண்டு நின்றார். ஆதலால் அவருக்குத்திருவருட் பலம் கிடைத்தது. இன்றும் நாம் அனைவரும் வணங்கி வழிபடத்தக்க பெரும்பதவியை அவர் பெற்றிருக்கின்றனர். இப்பெரும் பதவியை கடவுள் அவருக்கென விசேடித்து அருளியதாக நினைக்கவேண்டாம். நம்மில் ஒவ்வொருவரும் அம்மகான் நடந்து காட்டிய வழியை உள்ளவாறே கடைப்பிடித்துக்கொண்டால் அத்திருவருள் நோக்கம் நமக்கும் கிடைத்து நாமும் மோக்ஷ இன்பத்தை அடைவோம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை; இதுவே நல்வழியாம்.

திருநாவுக்கரசு.

ஆச்சரியத்தினால் அறிவு விருத்தி யாகுமே!

உற்றவர்க்கெல்லாம் நற்றுணையாகிக் கற்றவர் கூற்றைத் தெற்றென வுணர்த்தும் களிப்புறற்கேய்ந்த வொளித் தண்ணிலா வீசியுயர் புகழ்படைத்த ஞாலம் போற்றும் பாலமாமதி மங்காய்!

நின் பெயர்ப் பெருமையைத் தென்மொழி வழி நிறீஇச் செல்லுழிக் கற்றறிவில்லாச் சிற்றறிவுடைய யானும் நின் பின்னேபோந்துழிச் சின்மொழி கூறுதுலகங் கைக்கொளும் என்னும் நினைவு, செவ்விதாக என்னெஞ்சகத் துதித்தமையினாலே, சிலவாக்கியத் தொடைகளை ஈண்டு வரையக்கருதினேன். "குறை பலமாமதி கொளினு மன்னதா, லுறுபயன் நோக்கியே யுலகம் போற்றல்போல்" எனக்கவிஞர் சிரோமணியாகிய கச்சியப்ப முனிவரருந்திருவாய் மலர்ந்தருளினார்கள். ஆதலின், யானும் பல குறையுறு முறைபெறத் தரும் விஷயங்களையும் போற்றி ஏற்றுக்கொள்ளுவர் பெரியோர் என்றும் நினைக்கின்றேன். அன்றியும் சந்தனமரந் தன்னையடுத்த மரங்களுக்கும் நறுமணங்கொடுத் துறுபெரும் பெயர் நிறுவுதல்போல, என் விஷயத்தையும் நன்கிதுவென நாடிடவுஞ் செய்வாய் என்பதும் எனது குறிப்பு. இவை நிற்க,

ஒருவன் ஒரு பொருளைப் பார்த்த மாத்திரத்திலே, அப்பொருள் எவ்வளவு ஆச்சரியத்தை விளைக்கத்தக்க அதி நூதன ஆடம்பரத்தோடு காணப்படுகின்றதோ அவ்வளவு அறிவு வளர்ச்சியை அதனாலே அவன் பெறுவான். கண்களுக்கு இனிமை பயவாத பொருள்களை ஒருவன் கவனிப்பதில்லை. இது பிரத்தியக்ஷம். இதற்கு ஒரு சிறு சரிதம் சுருக்கி விளக்கி இங்கே எழுதுகின்றேன்.

சனக மகாராசனைப் பிரம்மஞ்ஞானியென்று எல்லோருஞ் சொல்வது வழக்கம். அதற்கு என்ன காரணம்? சனகன் அரசனாக விருக்கின்றான். அப்படி யிருந்தும் அவன் அப்பெயரை எப்படி அடைந்தான்? அதனை யான் அறியவேண்டும் என்று ஒரு அந்தணன் ஆவல்கொண்டு, மிதி என்பவனாற் றாபிக்கப்பட்டமையினாலே "மிதிலை" எனவழங்கப்படும் அதிக திவ்வியாலங்காரம் வாய்ந்த இராஜதானியையடைந்து, சனகமகாராசனை நோக்கி, இராசாவே! தாங்கள் ஒருபெரிய ராச்சியத்தை யாளு

கின்றீர்கள். தங்களுக்குள்ள மனக்கவலை பிறரொருவருக்குமில்லை. அஷ்டசம்புத்துகளும், மகாவுத்துங்க சுகங்களும் தங்களைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. இப்படியெல்லாமிருந்தும் தங்களை ஞானி என்று கூறுதல் என்னை? தாங்கள் எப்படி ஞானியாக இருக்கக்கூடும் என்று வினவினன்.

அப்பொழுது மகாராஜன் கூறுகின்றான், வேதிய சிரேட்டரே! உமது சந்தேகத்தை இன்று சாயரட்சைக்குள்ளே நிவிர்த்திசெய்து வைக்கின்றேன். யான் சொல்லுகிறபடி நீவிர் செய்ய வேண்டும் என்று தன்னேவுகாரரையழைத்து நீங்கள் இவ்வேதியரை மொட்டையாக்கி ஜனங்களின் ஆடல்பாடல் முதலியன நடைபெற, ஒரு குடத்திலே ஜலம் நிரப்பித் தலைமீது வைப்பித்துத் தெருக்கடோறும் சுற்றிவரச் செய்யுங்கள் என்றான். உடனே பிராமணனை அங்ஙனமே தெருக்கடோறுஞ் செல்லும்படி செய்து தூதர்கள் மிகவும் பயமுறுத்தி வந்தனர். பின்பு ஜனக மகாராசன் வேதியரை நோக்கி, ஐயா! என்ன புதினஞ்சொல்ல வேண்டும் என்று வினவினன். அதற்கு அந்தணன் கூறுவான். மகாராஜாவே, நான் ஒருவிசேடங்களையும் அறியவில்லை. ஏனென்றால் நான் ஒருதுளி நீரும் பூமியிற் சிதறக்கூடாதென்ற ஏவுகாரர் கூற்றின்படி குடத்திலேயே கவனஞ் செலுத்திச் சென்றமையினாலேயாகும், என்றான். அப்போது உமது செய்கைபோலத் தான் எனது செயலுமிருக்கும். ஆதலினாலே என்னைப் பிரம்மஞானியென்று எல்லுமல்லுஞ் சொல்லிவந்தனர். இவைகளை நீவிர் மனத்தமுந்தி சந்தேகம் நீங்கி நற்சிந்தையுடன் வாழுதிர் என்றான். இதனாலே "அச்சரியமுண்டானால் அறிவு உண்டாகும்" என்னும் பழமொழியும் பயன்மொழியாகும். ஆகவே, மனநிலைகொண்டு மாந்தர்கள் மகா திவ்விய கருணாகரராகியசிவ பெருமானை எத்தலத்தினும் எவ்விடத்தினும் வழிபாடு புரிந்து வாழ்வெனும் மையலை நீக்கி உய்வதற்குரிய மெய்வழி தேடலாவசியகமாகும் என்பது புலப்படுதல் கண்டு இடைவிடா திறைவனை யிறைஞ்சுவோமாக. சுபம்.

வ. மு. இரத்திினேசுவர ஐயர்.

யாழ்ப்பாணம்.

சூரியன்

(211-ம் பக்கம் தொடர்ச்சி)

சூரியகிரகணம்:—சூரியகிரகணம் இன்னதென்று சொல்லு முன்னே சந்திரன் இன்னதென்பதை அறியவேணும். சந்திரன் என்ற வானஜோதி பூமியைச்சுற்றி மாதம் ஒரு முறை பிரதக்ஷிணஞ் செய்கிற ஒருகோளம். அது பூமிக்கு உபகிரகம். நமக்கு ஒளிகொடுப்பது இதுவே. இதற்கு இயற்கையான ஒளியுமில்லை, உஷ்ணமுமில்லை. சூரிய வெளிச்சம்பட்டுப் பிரகாசிக்கக்கூடியது. சூரியனுக்கு அடுத்தாற்போல வானஜோதிகளில் மிகவும் விசித்திரமும் அழகுமுள்ள கிரகம். இது பூமியைப் பிரதக்ஷணஞ்செய்துவரும் அழகும் வேகமும் அதன் வளர்பிறை, தேய்பிறைக் காட்சியும் அதனால் வானத்தில் அடிக்கடி நேரும் கிரகணக்காட்சிகளும் மிகவும் அற்புதமானவைகள். எல்லா வானஜோதிகளிலும் பூமிக்கு மிகவும் சமீபத்திலிருக்கின்றது சந்திரன். (2, 38, 800) இரண்டு லக்ஷத்து முப்பத்து எண்ணாயிரத்து எண்ணூறு மயில் தூரத்தில் பூமியைச் சுற்றிவருகிறது. 50 சந்திரனை ஒன்றுகச் சேர்த்தால் பூமியளவு உருண்டையாகும்.

பூமியின் சுற்றளவைப்போல் 10 மடங்குகொண்டது. சூரியனுக்கும் சந்திரனுக்கு முள்ளதூரம், சந்திரனுக்கும் பூமிக்கு முள்ள தூரத்தைப்போலச் சுமார் 400 மடங்கு கொண்டது. சந்திரன் பல சமயங்களில் பலவடிவுள்ளதாகத் தோற்றுகிறது. பூமியைச் சூரியன் ஆகர்ஷிப்பதால் அது ஒரு பாதையின் வழியாய் சதா சூரியனைச் சுற்றிசுற்றி ஓடிக்கொண்டிருக்கிறது. அதைப்போலவே பூமி சந்திரனை இழுக்கிறது. பூமிக்குச் சந்திரனைப்போலவே, மற்றச் செவ்வாய், குரு, சனிமுதலிய கிரகங்களுக்கும் அநேக உபகிரகங்களுண்டு. ஆனால், பூமிக்குச் சந்திரன் ஒரே பெரிய உபக்கிரகம். சந்திரனின் குறுக்களவு (2162) இரண்டாயிரத்து நூற்றறுபத்து இரண்டு மயில். பூமி ஓர் இடத்தில் நிலையாயிருக்குமானால் அதை ஒரு தடவை சுற்ற, சந்திரனுக்கு 27-நாள், 7-மணி, 43-நிமிஷம், 11-விநாடி, ஆகிறது. இது சாந்திரமாஸம். ஆதலால், அமாவாசை முதல் மறு அமாவாசை வரையில் சந்திரன் பூமியைச் சுற்றிவர $27\frac{1}{4}$-நாட்களோடுகூட, இன்னும் கொஞ்சநாட்கள் அதிகமாக ஓடவேண்டியிருக்கிறது.

அதாவது சந்திரனனது சூரியனைச் சுற்றி ஓடும். பூமியை ஒரு தடவை சுற்றிவர $29\frac{1}{2}$-நாட்களாகின்றன. இம்மாதிரி சந்திரன், பூமியைச்சுற்றி ஓடும் மார்க்கத்திற்குச் சந்திரவீதி என்று பெயர் இவ்வீதி முட்டைவடிவமாயிருப்பதால், பூமியைச் சுற்றி வரும்போது சந்திரன் ஒரு சமயத்தில் பூமிக்குக் கிட்டவும் மற்றோர் சமயத்தில் தூரத்திலும் இருக்கும்.

சந்திரன்பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலிருக்கும்போது அதன் இருண்டபாகமே நமக்கு எதிரிலிருக்குமாதலால் நாம் சந்திரனைப் பார்க்கமுடியாது. அப்போது நாம் அமாவாசியை என்று சொல்லுகிறோம். சந்திரனுக்கும் சூரியனுக்கும் நடுமத்தியில் பூமிவரும்படி, சந்திரன், சூரியனிருக்கிற பக்கத்திற்கு எதிர் பக்கத்தில் போகுங்காலத்தில், சந்திரன் வெளிச்சமான பாகம் முழுவதும் நமக்குத் தெரிகிறது. அப்போது அதைப் பூரணச் சந்திரன் (பௌரணமி) என்கிறோம். அமாவாசை காலத்தில் சந்திர பிம்பத்தின் வெளிச்சமிருக்கிற பக்கம் சூரிய முகமாகயிருப்பதால் ராத்திரிகாலத்தில் பூமிக்குச் சந்திரனல் வெளிச்சமுண்டாவதில்லை. பௌர்ணமாவாசை காலத்தில் சந்திரபிம்பத்தில் சூரியவெளிச்ச மடிக்கிற பக்கம் சூரியனுக்கு எதிர் முகத்தில் பூமியைப் பார்த்திருப்பதால் இராமுழுவதும் பூர்ணமான சந்திரபிம்பத்தின் வெளிச்சமும் பூமியில் படுகிறது.

அமாவாசியைமுதல் பௌரணமி வரையில் சந்திரனுடைய சூரியவெளிச்சத்தைப் பெறுகிற அடிப்பாகமானது நமக்கு வர வர அதிகமாகத் தெரிகிறது. இதை நாம் வளர்பிறை அதாவது சுக்லபக்ஷம் என்கிறோம். பௌரணமி முதல் அமாவாசியை வரையில் சந்திரனின் வெளிச்சமான மேல்பக்கம் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைகிறது. இதை நாம் தேய்பிறை அல்லது கிருஷ்ணபக்ஷம் என்கிறோம்.

(இன்னும் வரும்)

கோ. அரங்கசாமி அய்யங்கார்,
ஸ்கூல் மாஸ்டர், செம்போடை.

குருபக்தி

இஃது ஸ்ரீ காஞ்சிபுரத்துக்கு அடுத்த ஐயன்பேட்டை - சிவலோக மடத்தில் (23-3-18-ல்) நடந்த 5-வது வருடமஹோத்ஸவகாலத்தில் இளையனூர் வேலூர் வேதாந்ததர்க்க போதகாசிரியர் ஸ்ரீமத் சாது முருகேச முதலியாரவர்கள் அக்ராசனத்தின் கண், புதுப்பாளையம் சமரஸ சன்மார்க்க சங்கத் தலைவரும், தமிழ்ப் பண்டிதருமாகிய ஸ்ரீமான்-ப. மாசிலாமணி முதலியாரவர்கள். உபந்நியசித்த விஷயப் பொழிப்பு.

சாது மஹா ஜனங்களே! இப்பேரவையின் கண் சிறியேன் குருபக்தி எனும் அரியவிஷயத்தை பேசுவ தசாத்தியமாயினும், "பெரியவர்தந் தரிசனத்தாற் பெறுதபொருளொன்றுண்டோ" எனும் முதுமொழிப்படி ஈண்டு நிறைந்துள சங்கமூர்த்தியாதி சாதுக்களின் தரிசன விசேஷத்தாலும், எம்மையாளுடைய எல்லாம் வல்ல அம்பலக்கூத்தன் கிருபா வீக்ஷண்ணியத்தாலும் இனிது நிறைவேறு மென்னும் நம்பிக்கையுடன் கூறத்துணிந்துளேன். இதில் ஏதேனும் குணமுளதேல், அன்பர்களங்கீகரிக்கும்படி வந்தனத்துடன் பிரார்த்திக்கின்றேன்.

நாம் யாதாயினு மொன்றை அறியவேண்டின் அதன் தன்மை முதலிய யாவு மறிந்த பின்னரே, அதனையறிந்தவராவோ மென்பதனுபவ சித்தமன்றோ? அதுபோல் ஈண்டெடுத்துக்கொண்ட விஷயம் குருபக்தியாமாகலின், அதனை யறியவேண்டிய நாம், குருபக்தி என்றால் என்ன? அதனைச்செய்யும் விதமெப்படி? அதனலாம் பயனென்ன? அவை புரிந்தடைந்தவர் யாவர்? அவை நமக்கவசியந்தானு? என்னும் விஷயங்களை விசாரித்துணர்ந்த பின்னரே குருபக்தியின் இலக்ஷணம் நன்குணர்ந்தவராவோமாதலின், அவ்வண மாராய்வாம்.

1. குரு-பக்தி இலக்ஷணம்.

குருபக்தி என்றால், குரு பக்தி எனவிரண்டு பதங்களாலாய ஒரு சொற்றொடர். இது வடமொழிப்பதம். இவை நந்தமிழில் ஆசான் அன்பு எனப்பிரிந்து ஆசானிடத்துச் செய்யு மன்பென, ஏழாம் வேற்றுமை யுருபும்பயனும் உடன் றொக்கத்தொகையாய் நின்றது. ஆசான், ஆசிரியன், தேசிகன், குரவன், குரு என்பன ஒருபொருள் குறிக்கும் பலசொற்றொடர்கள். ஆகவே குருபக்தி என்றால், குருவினிடத்துச் செய்யும் பக்தி என்பது இதன் திரண்ட பொருள்.

குரு என்பது காரணப்பெயர். யாங்கனமெனின், கு என்ருல் அஞ்ஞானம் அல்லது இருளெனப் பொருள். ரு என்ருல் நீக்கம் அல்லது ஒளி எனப்பொருள். ஆகவே தமையடுத்த சீடர்களுடைய அஞ்ஞானமாகிய இருள்நீங்க, ஞானமாகிய ஒளியைத்தருபவரென காரணப் பெயரானமை காண்க. மேலும் குஎன்பது சுத்த நிர்க்குண சொரூபமும், ரு என்பது கேவல நிராகாரசொரூபமு மானதால், சுத்த நிர்க்குண நிராகாரப் பிரஹ்மத்தை இது வெனும்படி சுட்டாமற் சுட்டி காட்டுபவனுமாமென்க இதன்றியும் இவ்விரண் டக்ஷரத்திற்கே வேதாகமங்களில் பலபடித்தான பொருள் விரிந்திருக்கின்றன. சுருங்கச் சொல்லுமிடத்து சப்தகோடி மஹாமந்திரங்களுள் இஃதே மிக்க சிரேயஸ்ஸையுடையனவாம். இதனை குரு கீதையினுல் நன்குணரலாம்.

இத்தகைய மேன்மை வாய்ந்துள இவ்வக்ஷரங்களை தமக்கு காரணப் பெயராகப் பூண்டுள்ள குருமார்க ளெண்வகையினராவரென சாஸ்திரங்களியம்பா நிற்கும். அவர்களுள் சாஸ்திரங்களிலுள்ள விஷயங்களை விளங்கப் போதிப்பவரே வேதககுரு. பிருதிவியாதி தத்துவங்களை நிஷேதஞ் செய்தல் வாயிலாக பரதத்துவத்தை தரிசிப்பிப்பவரே போதககுரு. ஸ்தம்பனமாதி மாரணமீருகவுள்ள அஷ்ட கருமங்களைப் போதித்து, இம்மையிற்சுகமும் மறுமையில் துக்கமுமடையச் செய்பவரே நிஷித்தகுரு. நல்வினை புரியுமாறு போதித்து மறுமையில் மாத்திரம் சுகமடையச் செய்பவரே காமியகுரு. விவேக வாயிலாக சமதமாதிகளை அடையப்போதிப்பவரே சூசககுரு. நாமரூப விஷயங்களை மித்தை செய்தல் வாயிலாக ஆத்மாவின் கண்பிரியம் வரச்செய்பவரே வாசக குரு. ஜீவப்பிரஹ்ம ஐக்யஞானமருள்பவரே காரககுரு. ஜீவப்பிரஹ்ம ஐக்யத்திற் ரேன்றிய சம்சயத்தை யொழிக்கும் வாயிலாக சர்வதுக்க நிவர்த்தி பரமானந்தப் பிராப்தி வடிவ நித்ய முத்தியை அடையச்செய்பவரே விகிதகுரு. எனப்படுவர். இவருள்முறையே ஒருவர்க்கொருவர் உயர்ந்தோராவர்.

ஆயினும் ஆசிரியரொருவரே அதிகாரிகளின் பக்குவபேதம்பற்றி இவ்வெண்வகைப் பெயர்களை ஏற்பது முண்டு. இதற்குச்சான்று சூதபுராணிகர். இஃதவரியற்றிய புராணேதி காசங்களால் ஸ்பஷ்டமாம். (இன்னும் வரும்)

க. குப்புசாமி முதலியார்,
சமரஸ சன்மார்க்க சங்கம், புதுப்பாளையம்.

மீதூண் விரும்பேல்

நம் தேசத்தில் நூதன நாகரீகத்தால் எத்தனையோ விதமான கெடுதல்கள் உண்டாயிருக்கின்றன. அவைகளில் அளவிற்கு மிஞ்சியுண்பதுவு மொன்றே. முற்காலங்களி லில்லாததும், வைத்தியர்களுக்குங் கூடப் பெயர்கள் தெரியாத எத்தனையோ வியாதிகள் ஜனங்களை இம்சை செய்து கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் நூதனநாகரீகமே. "உண்டவன் உரஞ் செய்வா'' னென்ற பழமொழியை விபரீதமாயர்த்தம் செய்து கொண்டு, அநேகர் கணக்கு வழக்கில்லாமற் சாப்பிட்டு அதனால் மிகவும் கஷ்டமடைகிறார்கள். உடலுயிரு மொன்றாய்த்தான் உணவு உட்கொள்கிறோ மென்பதை முற்றிலும் மறந்து, உண்பதற்கே உலகத்தில் உற்பவித்ததுபோல், அடிக்கடி உருசியுள்ள உணவையே நாடி, சாக்குகளில் சாமான்களை நிறப்புவதுபோல தங்கள் வயற்றை முழுவதும் ஆகாரங்களால் நிறப்புகிறார்கள். அந்தோ! பரிதாபம் !! பரிதாபம் !!! அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் என்ற மேலோர் வாக்கியத்தைக் கொஞ்சமேனும் கவனியாமல், அதிகமாயுண்டால் அதிக பலமுண்டாகுமென் றெண்ணித் தம் குழந்தைகளைக் குரல்வளைமட்டும் சாப்பிடும்படி கட்டாயம் செய்கிறார்கள் அநேகர். தாங்கள் கெட்டது மல்லாமற் தம்பின்னோர்களையும் கெடுக்கிறார்களே இவர்கள். இதுவேயோ தம்மக்களைக் காப்பாற்றும் முறை? கவனிக்கும் முறை?

அதிகமாயுண்ட உணவு ஜீரணமாகாவிட்டால் வியாதிகளுக்கே மாதாவாகிய மலச்சிக்கல், வாயு, கண் ரோகம், மேகம் முதலான அநேக கொடிய நோய்களுண்டாகின்றன. இன்னும், உடம்பில் நாளாவட்டத்தில் நஞ்சுண்டாகிக் கடைசியில், சௌக்கியப்படுத்த முடியாத நானாவித ரோகங்களுண்டாகின்றன. மிதமிஞ்சிய ஆகாரம் ஜீரணமாய் விட்டாலோ, (கஷ்ட திரேகஉழைப்பால்), உடம்பு அளவிற் கதிகமாய்ப் பருத்துக் கனத்துக் கொழுப்பேற, சரீரத்திற்கு மிகவும் கஷ்டமாய்த் தோன்றும். உள்ளிருக்கும் கருவிகளை இக்கொழுப்புச் சுற்றிக்கொள்ளுமாதலால், உட்செல்லும் பிராணவாயு குறைபட, ரத்தம் அசுத்தமாய் விடுகிறது; பெருமூச்சு வாடும்படி நேரிடுகிறது, ரோமத்துவாரங்கள் அடைபடவே, சரீரத்தில் நமைச்சலுண்டாகிறது; நிறம் மாற ஆரம்பிக்கிறது; முகத்தில் காந்தி மங்குகிறது.

"இழிவறிந் துண்பான் கணின்பம் போனிற் கும்கழிபே ரிரையான்கணோய்" என்றார் நாயனாரும். அதாவது, குறையாக வுண்பவனிடத்து இன்பம்போல், நிறையாக வுண்பவனிடத்து த்துன்பமிருக்கிறது. அதிக ஆகாரங் கொண்டால் நன்றாய் ஜீரணமாகாமல் அக்த்தவாயு உண்டாகிறது. சிலர் இதை சப்தத்துடனும் பிரயோகிக்கிறார்கள். இவ்விதம் செய்பவர்களை ஜனங்கள் அலட்சியமாய் எண்ணுகிறார்கள். மோட்டார், ரயில், டிராம், ஜட்கா முதலிய வண்டிகளில் சவாரிசெய்யும் போது, துற்நாற்றமுள்ள வாயுவை வெளிவிட்டு ஆபாசம் செய்தால், அவைகளிலிருக்கும் பிரயாணிகளின் மன மெவ்வித மிருக்கு மென்பதை இங்கு சொல்லவும் வேண்டுமோ? திரேகத்திற்குச் சத்தியுண்டாகுமென்று நினைத்து அளவு கடந்து உட்கொண்ட உணவோ, பல முண்டு பண்ணுவதற்குப் பதிலாக, ஏற்கனவே யிருக்கும் சத்தை ஜீரணத்திற்காக வேண்டி இழுத்துக் கொள்கிறது. இப்படி ஜீரணம் செய்யும் பொருட்டு அதிகம் ரத்தம் வேண்டுவதால், உடம்பின் மற்ற பாகங்களிலுள்ள ரத்தமெல்லாம் இரைப்பையை நோக்கி ஓட, உடனே அறிவிற்கே ஆதாரமான மூளையில் இரத்தம் குறைபட, அதுவேலை செய்யாமலிருக்க, அசதியோடு கூடிய உறக்கமும் மந்த புத்தியு முண்டாகிறது. "அதிகமாய்ப் புசித்தால் நோவையும், ஆயுட் குறைவையும், சுவர்க்காதிபோகக் குறைவையும், புத்திக்குறைவையும், உலக நிந்தையையும் உண்டு பண்ணும் ஆகையால் அதை நீக்க வேண்டு" மென்று மநுதர்ம சாஸ்திரத்தில் கூறியிருக்கிறது. "உலகத்தில் ஆகாரமே யில்லாம லிறந்தவர்களைக் காட்டிலும், மீதூணுண்டு நோய் கொண்டிறந்தவர்களே யதிக" மென்று மகா பெரிய நெப்போலியன் சக்கிரவர்த்தி சொல்லுகிறார். ஆனால் சாப்பாட்டைக் குறைத்தாலும் மிகவும் கஷ்டமே. உணவு குறைந்தால் நமது உடம்பில் இரத்தம் குறைந்து, ரத்த நாளங்கள் பலங்குன்றி, சரீரம் மெலிந்து போவதுடன் சக்தியற்றுப் போகிறது. மீதூணினுங் குறையூணினும் மிக்க கெடுதியே.

பலர் ஒரு நாளில் சிற்றுண்டியுட்பட 4-5-தடவைகள் கூடச்சாப்பிடுகிறார்கள். காபிடீயே இவர்களின் காயகற்பங்கள். காமிகள் ஸ்திரிகளின் பேரில் மோகமாயிருப்பது போல, இப்பெருந்தீனிக்காரர்கள் ஆகாரத்தின்மீது அவ்வளவு ஆசையாயிருக்கிறார்கள். வயறு நிறையச் சாப்பிட்டிருப்பினும் சாப்பாட்டிற்க

ழைத்தால், மறுபடியும் உண்கிறார்கள் சிலர். சிநேக பந்தத்தால் அளவு கடந்தோ, அல்லது காலமற்ற காலங்களிலோ சாப்பிடு கிறார்கள் இன்னும் பலர். உருசியுள்ள உண்டி கிடைத்தால் எக் காலத்திலும் சாப்பிட தயாராயிருக்கிறார்கள் வேறு சிலர். நாளைக்கு இவ்வுருசியான உணவு கிடைக்க மாட்டாதேயென்று நினைத்து விருந்துகளிலேனும் விசேஷ காலங்களிலேனும் வயறுகொண்ட மட்டும் தின்கிறார்கள் சிலர். இவ்விதமாயுண்டன்றோ இவர்கள் இயற்கைக்கு விரோதம் செய்து இகத்தின் சுகத்தை இழக்கிறார்கள்.

ஒரு என்ஜினில் நெருப்புக்கு விறகுபோடுகிறவன் தீ அதிக மாயிருந்தால் விறகு போடுவதை நிறுத்தியும் நன்றாய் எரியாம லிருந்தால், வேண்டுமான கட்டைபோடுவதும்போல,நமதுசரீரத்திற்கு நாம் உணவளிக்க வேண்டும். பகுத்தறிவில்லாத பட்சிகளும், மிருகங்களுங்கூட சரியாய்த் தீனி உட்கொள்ள;பிராணி அம்சங்களில் மேலான மானிடராகிய நாமோ அளவு கடந்து உண்பதால், அவைகளுக்குங்கூட மிக்க தாழ்ந்தவர்களாயிருக்கி றோம். இவ்விருபதாம் நூற்றாண்டின் நாகரீகத்தை யனுசரித்தவர்களுக்கு இது மகா வெட்கக் கேட்டைத் தருகிறதல்லவா? கைத்தொழில் கல்வி, சங்கீதம், சித்திரம், சாஸ்திரம் முதலியவற்றின் விர்த்தியை மட்டும் யாவரும் கவனிக்கிறார்களே யல்லாது, சுய அபிவிர்த்தியைப் பற்றிப் பராமுகமாயிருப்பது மிகவும் விசனிக்கத் தக்கதே.

சரியாய் உண்பதாலுண்டாகும் நன்மைகளைப்பற்றிக்கொஞ்சம் கவனிப்போமாக. உடம்பிலுள்ள கருவிகள், அதிகவேலையில்லாததால் நன்றாய் இளைப்பாறுகின்றன, ஆகையால் அவைகள் உறுதியாயிருக்கின்றன. சாப்பிட்ட ஆகாரம் சரியாய்ஜீரணமாகிறது. மிதமிஞ்சிப்புசித்து எவ்வெவ்வித வியாதிகள் உண்டாயினவோ,அவைகளை கவனித்துஅளவாகச்சாப்பிடுவதாலேயே, நீக்கலாம்.இன்னும், சுறுசுறுப்பு, புத்திதீட்சண்யம், சுகம்,பலம், சந்தோஷம், ஆயுள்விருத்தி, காந்தசக்தி முதலியவைகளுண்டாகும். இப்பொழுது நடக்கும் இந்த ஐரோப்பிய கோரயுத்தத்தால், ஜெர்மெனியில் உணவுப் பொருள் குறைபடவே, ஜெர்மனியர்கள் கைவச மிருக்கும் தீனிகளையும் கிடைத்த உணவையும் கணக்காய் உண்டதால், அவர்கள் பலமாயும் சுகமாயு மிரு

க்கிறார்களென்று சென்ற வருஷத்தில் ஓர் அமெரிக்காபத்திரிகை வெளியிட்டிருக்கிறது. இது மட்டுமா? இன்னும், சாப்பாட்டுச் செலவு குறைகிறது. வைத்தியர்களுக்குக் கொடுக்கும் பணம் மீதமாகிறது. எல்லாரும் சுகமாயும் சிக்கனமாயு மிருப்பதால் தேசத்திற்கே நன்மையுண்டாகிறது. சரியாய்ப் புசிப்பதால் ஆகாரத்தின் பேரிலிருக்கிற அதிக ஆசை ஜெயிக்கப்பட்டும் சரீரத்தையடக்கி யாளும் சக்தியுண்டாகிறது.

நமது வயற்றை அரைப்பங்கை அன்னத்தாலும், காற்பங்கைஜலத்தாலும் நிறப்பி, மீதியிருக்கும் காற்பங்கை வாயு சஞ்சரிப்பதற்கு விட்டு விட வேண்டியது. மிதூண் விரும்பும் வழக்கத்தை நாம் சித்த சக்தியால் வெல்ல வேண்டும். தொழிலையும், தேகத்தின் தன்மையையும் கவனித்து,நாளொன்றுக்குஇத்தனை தடவைகளுக்கு மேற் சாப்பிடலாகா தென்று தீர்மானித்துக் கொண்டு அதன்படியே எவ்விடத்தும்,எக்காலத்தும் திடசித்தத்துடன் நடக்கவேண்டும். “ஒருவேளையுண் போன்யோகி;இருவேளையுண்போன்போகி; மூன்றுவேளையுண் போன்ரோகி” என்று நமது முன்னோர்களும் சொல்லியிருக்கிறார்கள். தினசரி உழைப்பாளிகள் ஒவ்வொரு நாளும் மூன்று காலமும், மனோ முயற்சியுள்ளவர்கள் இரண்டு காலமும் புசித்தலே சிறந்தது. மிதூணை விலக்குதலும் புலன்களை வெல்லுவதற்கு ஓர்வழியாகும்.

எனதருமைச் செந்தமிழ்ச் செல்வர்காள், நாம் நமது வீடுகளை எவ்வளவோ சுத்தமாயும் பத்திரமாயும் நன்றாயும் வைத்திருக்கிறோம். அவைகளைக் காட்டிலும் எத்துணையோ மடங்குமேலானதும், திவ்ய தேசோமயமான கடவுள் அம்சமாகிய ஆத்மாவசிக்கு மிடமான நமது சரீரத்தை எப்படி வைத்திருக்க வேண்டும். ஆகையால், நண்பர்களே, ஒழுங்காய் ஆகாரம் அருந்தி எப்போதும் சுகத்தை யடைவோமாக.

R. நாராயணசாமி,
தேவாரம், மதுரை ஜில்லா.

கபூர்தலா சமஸ்தான மன்னராகிய ராஜா டால்ஜித் சிங்கு யுத்தச் செலவுகளுக்காக 10-ஆயிரம் ரூபா கொடுத்திருப்பதோடு, வேண்டுமானால் தம்மையும் தமது சமஸ்தான பொருளாதாய மூலம் யாவற்றையும் ஏகாதிபத்யத்துக் கர்ப்பணஞ் செய்யச் சித்தமாயிருப்பதாக அறிவித்திருக்கிறார்.

கடையெழுவள்ளல் வரலாறு

(221-வது பக்கத்தொடர்ச்சி)

இச்சிறு சம்பவத்தால் கைம்மாறு கருதாது உயிர்களிடத்துப் பேகனுக்கு இயல்பாகவே அமைந்த பெருங்கருணைத்திறம் எத்துணைச் சிறந்ததாகக் காண்கிறது. இவனையன்றோ உலகம் கருணைக்கட லெனப்புகழ்ந்து கூறத்துணியும்.

இத்தகைய அன்பு, அருள், ஈகை, சீலம், முதலிய உத்தம குணங்களுக்கு உறைவிட மாய்த்திகழ்ந்த பேகன், பழவினை வந்து பைய உறுத்த நேர்ந்ததால் கற்பிற்சிறந்த கண்ணகியென்னும் தனது மனைவியைத் துறந்து காமவயத்தனாகி வேசைபாற் சென்றடைந்து அவளுடன்கூடி உண்பதும், உடுப்பதும் உலாவுவதும், உறங்குவது மாகி, ஒழுக்க நிலைதவறித் திரிவதைக் கண்ணகி கண்டு பொருளாகிக் கோடை காலத்து மயிலெனத்தளர்ந்து கண்ணருவி வார்த்து அருந்துயருழந்தாள். பேகனுக்கும், கண்ணகிக்கும் நேர்ந்த இப்பிரிவு பற்றிய செய்தியானது அவர்கள் இல்வாழ்க்கைக் காலத்தே பெரிதும் உபசரிக்கப்பெற்றுப் பெரும்பயனடைந்த புலவர் பெருமக்களாகிய கபிலர், பரணர், வன்பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்க்கிழார், என்ற சான்றோர்க்கு எட்டியதும் அப்புலவர்கள் பேகனது தகாச்செய்கைக்கு மிகவருந்தி அவர்களைப் பண்டுபோல் ஒன்று படுத்த நினைந்து பேகனது ஆவிநன்குடி யடைந்து அவ்வள்ளலைக்கண்டு அவன் மனம் பெரிதும் இரங்கும்படி ஒவ்வொருவரும், தனித் தனியே இனியசெய்யுட்களால் பாடத்தொடங்கினர். முதலிலே கபிலர்:—

'சிறந்த மலைநாடானே! போர்வன்மையும் கொடைத்திறமு முடையபேக! நேற்றுவழி நடந்து வருந்திய என் சுற்றம் பசித்ததால் உயர்ந்த மலையிடத்துள்ள சிறிய ஊரில்உன் வாயிற் கண்ணேவந்து நின்னையும், நின்மலையையும் வாழ்த்தி யான்பாடி நின்றேனாக. அப்போது துக்கத்துடன் சொரிந்த கண்ணீரை யுடையவளாய் அக்கண்ணீர் முலையிடத்தை நனைக்கும்படி பொருமி வேய்ங்குழல் இரங்கியொலிப்பது போல ஒருத்தி அழுதாள்; இரங்கத்தக்க அன்னாள் யார் கொல்லோ? சொல்லுக.' என்னுங் கருத்துத் தோன்ற,

"புனைத்தினை யயிலுநாட சினப்போர்க்
கைவள் ளீகைக் கடுமான் பேக
யார்கொ லளிய டானே நெருநற்
சுரனுழந்து வருந்திய லொக்கல் பசித்தெனக்
குணில்பாய் னிரங்கு மருவி
நளியிருஞ் சிலம்பிற் சீறா ராங்கண்

வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று
நின்னுநின் மலையும் பாட வின்னா
திருத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாண்
முலையக நனைப்ப விம்மிக்
குழலினை வதுபோ லழுதனள் பெரிதே."

எனப்பாடினர். (புறம் 143)

இரண்டாவது. பரணர்:—

'நேற்று மாலையில் மழை மிகுந்த நின்காட்டை யாங்கள் பாடிக்கொண்டு வந்தேமாக. நீலமலர்போன்ற கண்களினின் றும் கலங்கி வீழ்ந்த நீர்த்துளிகள், பூணையுடைய தன் மார்பகத்தை நனைக்கும்படி வருந்திநின்ற ஒருத்தி எம்முன் வந்துதோன்ற, அவளைநோக்கி யாங்கள் 'இளையோய்! எங்களையுடையநட்பும் விருப்பும் தலைவனாகிய பேகனுக்கு நீ உறவினையோ' என்று வணங்கிக் கேட்டபோது அவள், காந்தண் மொட்டுப்போன்ற தன் விரலாலே கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, 'நாங்கள் அவனுடைய உறவினர் அல்லேம்; கேண்மின், விளங்கிய புகழுடைய பேகன், எம்மையொக்கும் ஒருத்தியுடைய அழகைக் காதலித்துத் தன்தேரில் இந்நல்லூரின்கண் அடிக்கடிவருவன், என்று சொல்லுவர்.' இஃது என்னே! தலைவ! நீ அவட்கு இரங்கி அருள் பண்ணுதிருத்தல் மிகக்கொடியது' என்னுங் கருத்துத் தோன்ற:—

அருளா யாகலோ கொடிதே யிருள்வரச்
சீறியாழ் செல்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக
நின்று நெய்தலிற் பொலிந்த வுண்கண்
கலுழ்ந்துவா ரரிப்பனி பூணக நனைப்ப
வினைத லானாள் ளாக விளையோய்
கிளையை மன்னெங் கேள்வெய் யோற்கென
யாந்தற் றொழுதனம் வினவக் காந்தண்
முகபுரை விரலிற் கண்ணீர் துடையா
யாமவன் கிளைஞரே மல்லேங் கேளினி
யெம்போ லொருத்தி நலனயந் தென்றும்
வருஉ மென்ப வயங்கு புகழ்ப் பேக
னொல்லென வொலிக்குந் தேரொடு
முல்லைவேலி நல்லூ ரானே."

எனப்பாடினர். (புறம் 144)

(தொடரும்)

சி-கு. நாராயணசாமி முதலியார்.

கோயமுத்தூர்.

நாம் ஒழுகவேண்டிய நெறிகள்

(219-ம் பக்கத் தொடர்ச்சி)

கணித சாஸ்திரம் முதலிற்பயிலும் மாணுக்கன் ஒருவன், பற்பல கருவிகளைக் கொண்டு தன்னைத் திருப்திசெய்து, பின்பு எப்படிக் கருவிகளில்லாமலேயே கணிதம் கற்றுக்கொள்ளுகிருனே, அதேமாதிரி, விக்கிரகங்களின் மூலமாய்ப் பிறக்குகும் பக்தி வரவர முதிர்ந்து விக்கிரக ஆராதனையை விட்டு ஏகாந்தமாய்த் தன்னுள்ளேயே 'கடவுள் கோவிலில் மாத்திரம் இல்லை; எங்கும் வியாபித்தவர்' எனத்தெரிந்து காலமும் இடமுமிறியாது நினைத்த போதெல்லாம் அப்பரம்பொருளின் மேலேயே மனதைச் செலுத்தச் செய்கின்றது. இந்தப்பக்தியே இல்லறவாழ்க்கைக்குரி யாஞெருவன் பெறக் கூடியதாகும். இம்முதிரபக்தியால், தன் வெறுப்புப் பெருகுகின்றது. தன்னை வெறுத்தவொருவன், பகவான்மேற் பக்தி செலுத்துவது மன்றி, அவரால் சிருஷ்டிக்கப் பெற்ற ஆன்ம கோடிகளையும் அவர் அம்சம் எனக் கருதி,

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு" (குறள்) என்ற நீதிமொழியை மேற்கொண்டு பரோபகார சிந்தை, ஜீவகாருண்யம்முதலிய மார்க்கங்களிலேயும் மனதைச் செலுத்துகிருன்.

இந்த முதிர் பக்தியானது மேன் மேலும் பிரகாசிக்க,ஒருவனுக்கு அன்ன பானுதிகளின்மேற் கவலை வருவது மில்லை,தன் மேலிச்சையு மில்லை. இப்படி மிகவும் முதிர்ந்தபக்தியே தவம் ஆகும். தவஞ் செய்வார் முற்றுந்துறந்தார் என்றும், அவர்களுக்கு, தக்க பக்குவம் அடையாத நம்போலியர் போன்று,கோவிலும் குளமும் ஆவசியக மில்லை யென்றும், அவர்கள் கொண்ட கொள்கைக்கு ஏகாந்தவாழ்வே சிறந்ததென்றும் ஏற்படுவதால், அவர்களுக்குற்ற இடம் மனிதசஞ்சாரம் இல்லாதனவும், நிர்சப்தமாய் இருப்பனவுமாய மலைகளும் குகைகளுமா மென்பர் பெரியார். ஆயினும், மலைவழிக் குகைவழிப் போகாமல் மானிடர்களிடையே சஞ்சரித்தாலும் மேற்கூறிய வாறு இருப்பவரே தவத்திற் குரியாராவர். இங்ஙனமின்றி, தவக்கோலங் கொண்டு, தண்டுகமண்டலந் தாங்கியவராய்க் காவிவஸ்திரந் தரித்தும், நெஞ்சில் இருள்கொண்டு உலகினுள்ளாரை வஞ்சிக்கும் போலித்தவசிகள்,

"மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்ததொழித்துவிடின்" என்ற தெய்வப் புலமைத் திருவள்ளுவர் மதுரவாக்கை நன்கு தெரிந்து அழியா நரகத்திற்கு ஆளாகாமல் கண்விழிப்பார்களாக.

முற்றுந் துறந்த துறவிகளுக்கே, தவம் தகுந்ததென்று தெரிவதனால், இல்லற வாழ்க்கைக் குட்பட்ட நாம் அதைக்கொள்வது சாத்தியமல்லவெனினும், சிறிது நேரமாகிலும் சித்தத்தைச் சிவன்பாலிருத்துவது யாவருக்கு மியலுமாகையானும், அதைச் செலுத்துங் கணந்தோறும் அடியார்க்கடியராய் விளங்கும் பகவான் தக்கவாறு பதிலளிக்கிறாரென்பது சகல மதக் கோட்பாடுகளாகையானும், இன்பமுந் துன்பமும் நிலையற்றனவென்றெண்ணி இன்னலுறுஞ் சமயத்து மாத்திரமன்றி, இன்புறுமமயத்தும்.

> "என்பேவிறகா யிறைச்சியறுத்திட்டுப்
> பொன்போற்கனலிற் பொரியவறுப்பினு
> மன்போடுருகி யகங்குழைவார்க்கன்றி
> யென்போன்மணியினை யெய்தவொண்ணாதே." என்று

திருமூலர் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றதை நன்குணர்ந்து, மனதை எங்கும் பறக்கவிடாமல் ஒருபாலிருத்திப் பக்திசெய்வதையும் இல்லற தருமத்தோடு இருத்துவது சாலச்சிறந்ததாம்.

முயற்சி, ஊக்கம்.

ஒருகாரியத்தைச் சாதிக்கத்தொடங்குங்கால், காரியசித்தி பெறாமல் தடுக்கும் இடையூறுகளைத் துரும்பெனத் தள்ளி சித்தஞ்சலியாது காரியத்தினிடத்தே கண்ணாயிருக்கும் ஓர் அரிய குணமே முயற்சியென்றும், அத்தருவாயில் மனதில் கிளர்ச்சியெழுவதே ஊக்கம் என்றும் பெயர் பெறுவதால் ஊக்கமும் முயற்சியும் ஒன்றுசேர்ந்து விடாமுயற்சியை யுண்டுபண்ணுகின்றன. இவ்விரண்டும் ஒருவனுக்கு இருகைபோன்றவை. "முயற்சியுடையா ரிகழ்ச்சியடையார்" என்னும் நீதி உலகில் வழங்குவதால் முயற்சியின் வாயிலாய் வரும்பயன் சிறிதல்ல. ஆகவே, அபாரமான வேலைகள் சாதிக்கப்படுவது திடகாத்திரத்தாலல்லவென்றும், அது கடைப்பிடியால் தானென்றும் புலப்படுகிறது. 'எறும்பு ஊரக் கல்லுந் தேயும்' என்னும் முதுமொழியை நாம் கேட்டிருக்கிறோம்.

இதுகாறும்,

> "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
> சொல்லிய வண்ணஞ் செயல்" (குறள்)

என்றபடி நீதிநெறிகளைப்பற்றிக் கூறிவிட்டோமே; வீணேவாயிற் சொல்லுவதாற் பலனென்னை? என்றால், சொல்லுவதையெல்லாம் ஒருவன்செய்யத்துணிவது வீணேயாகும். எப்படியெனில், ஒருவன் எண்ணுவதும், சொல்லுவதும் ஒன்று இரண்டல்ல, அநேக ஆயிரம்.

(இன்னும் வரும்) கே-ஆர். கணபதி பிள்ளை,
குணியமுத்தூர்.

இஞ்சி

இஞ்சி என்பது ஓர்வகைச் செடியின் கிழங்கு. இது ஆசியாவின் தென்கிழக்குப் பாகங்களிலும் அதற்குச் சமீபமாயுள்ள தீவுகளிலும் பயிரிடப்படுகின்றது. இச்செடியானது செழிப்பான நாணலை அல்லது கோரைப்புல்லை ஒத்திருக்கும். இதன் கிழங்கு ஒருபோதும் முழுவதும் அழிந்து போவதில்லை. பூமிக்குமேலிருக்கும் இச்செடியின் தண்டு முதலிய பகுதிகளே வருஷத்துக்கு ஒரு முறை அழிந்து, பின்னர் கிழங்குகளிலிருந்து முளைத்து வளரும். செடியின்வேர் பூமிக்குள்ளே பருத்துக்கிழங்காகின்றது. ஒரு கிழங்கினின்றும் அநேக கிழங்குகள் கணுக்கணுவாக இணைக்கப்பட்டு உண்டாகின்றன. ஒவ்வொரு கணுவிலும் ஒவ்வொரு முளை தோன்றிச் செடியாய் வளரும். இச்செடி ஏறக்குறைய இரண்டு முழ உயரமாயும் அகலத்திற் குறைந்து நீண்ட இலைகள் உள்ளதாயுமிருக்கும். இஞ்சி தாளிலே பூக்கும். இப்பூ ஓர் வகை வெண்மை நிறமுள்ளது.

சித்திரை வைகாசி மாதங்களே இஞ்சி பயிரிடுதற்குரிய காலம். நிலத்தை நன்றாய் உழுது சீர்ப்படுத்தி, எழெட்டு முழ நீளமும், இரண்டு மூன்று முழ அகலமுமுள்ள பாத்திகளாக்கி, ஒன்றற்கொன்று சமீபமாக குழிகள் தோண்டி அவைகளிலே எருவை நிரப்பவேண்டும். பின்பு வெய்யல் படாமல் நிலத்திலே புதைத்து வைத்திருக்கும் விதைக்குரிய கிழங்குகளைப் பெயர்த்தெடுத்து சிறிய துண்டுகளாக வெட்டி, எருப்பெய்து வைத்த குழிகளிலே நட்டு அப்பாத்திகளைப் பச்சிலைகளால் மூடி விடுதல் வேண்டும். இவ்விலைகள் செடிகளுக்குப் பின்பு எருவுமாகும்; பெருமழை பெய்யும்போது தண்ணீர் அதிகமாகக் கிழங்குகளின்மீது விழாமற்படியும் காக்கும். இஞ்சி முளைப்பதற்குத் தண்ணீர் வேண்டுமாயினும், பாத்திகளிலே அளவுக்குமேல்தண்ணீர் நிலைத்து நின்றால் கிழங்குகள் அழுகிவிடும். ஆதலால் அளவுக்குமேற்பட்ட தண்ணீரை வடிந்துபோகச்செய்ய வாய்க்கால்கள் அமைக்கப்படல் வேண்டும். செடி முதிர்ந்து தாள்கள்வாடி உலர்ந்து போகும்போது கிழங்குகள் தோண்டி எடுக்கப்படும். உலராத இளங்கிழங்கு இஞ்சியென்றும், நன்றாய் முற்றிஉலர்ந்த கிழங்கு சுக்கு என்றும் வழங்கப்படும். சுக்கு, வெண்மை, கருமை என இருவகைப்படும். வெந்நீரிலே இட்டுச் சுத்தி செய்யப்

படுவதே கறுப்புச் சுக்கு என்றும், நீரினாலே கழுவப்படாமல் மேலே இருக்கும் மண்ணைத் தேய்த்து எடுக்கப்படுவதே வெள்ளைச் சுக்கென்றும் சிலர் சொல்லுகிறார்கள்: வேறு சிலர் இவை வேறு வேறு இனமென்று சொல்லுகிறார்கள். கறுப்புச்சுக்கு மஞ்சள் கலந்த சாம்பல் நிறமுள்ளது. வெள்ளைச்சுக்கு ஓர்வகை மஞ்சள் நிறமானது. கறுப்புச்சுக்கைப் பார்க்கிலும் வெள்ளைச் சுக்கு மிகக்காரமும் நல்ல மணமும் பொருந்தியது. பெரும்பாலும் கறுப்புச்சுக்கு வங்காளத்திலிருந்தும், வெள்ளைச்சுக்குமலையாளத்திலிருந்தும் பிறதேசங்களுக்கு ஏற்றுமதிசெய்யப் படுகின்றன.

இஞ்சி ஊறுகாய் போடப்படுகின்றது. உணவைச் சீரணமாக்குவதில் இதைப்போல் பிறிதொன்றும் கிடையாது. இஞ்சிச்சாறு மருந்தாக உதவுகின்றது. இது வாதம், இருமல், சோகை, வயிற்றுவலி, சுரம், வாந்தி, சன்னி, மாந்தம், சூலைமுதலிய நோய்களை நீக்குந் தன்மை வாய்ந்ததென்று வயித்தியர்கள் சொல்லுகிறார்கள். சுக்கும் இத்தகைய அநேக நோய்களை நீக்க வல்லது. இஞ்சியை வறுத்து எடுத்தசாறு மலத்தைக் கழியாது தடுக்கும்; வறுத்தவியாது எடுத்தசாறு மலத்தைக் கழியப்பண்ணும். பெரும்பாலும் அநேக மருந்துகளுக்கு இஞ்சிச்சாறு அநுபானமாக உபயோகப் படுத்தப்படுகின்றது.

இஞ்சிக்கு ஆங்கில "பாஷையில்" ஜிஞ்சர் என்றுபெயர். இது யவன பாஷையின் "ஜிஞ்சிபர்" என்னும் சொற் சிதைவாகும். ஜிஞ்சிபர் என்பது "இஞ்சிவேர்" என்னும் தமிழ்ச்சொற்களின் மரூஉ. இதனால் பண்டைக்காலத்தில் தமிழ் நாட்டிற்கும் அப்போது ஐரோப்பாவில் சிறந்து விளங்கிய யவன தேசத்துக்கும் வியாபாரம் நடந்து வந்ததென்றும், இஞ்சி இந்நாட்டினின்று அங்குகொண்டுபோகப்பட்டதென்றும் புலனாகின்றது.

1916-ம் வருஷம் பிரிட்டிஷ் இந்தியாவில் ஜுரத்தினால் மாண்டவர்கள் மட்டும் 40-லட்சத்து 85-ஆயிரத்து 784-பேர்;காலராவினால் மாண்டவர்களின்தொகை 288047; பிளேக் நோயால் 205525; வயிறு கடுப்பு, கழிச்சல் ஆகியவற்றால் 248381; சுவாசம் சம்பந்தமான நோய்களால் 286247; வைசூரி நோயால் 60642; 17 லட்சத்து 65 ஆயிரம் சொச்சம்பேர் மாண்டதற்குக் காரணம் தெரியவில்லை. 88 லட்சத்து 56 ஆயிரம் சொச்சம்பேர் மேற்படி வருஷத்தில் பிறந்திருக்க, 69 லட்சத்து சொச்சம்பேர் மாண்டுபோயிருக்கிறார்கள்.

இருமல் ரோகம்

(164-வது பக்கத்தொடர்ச்சி)

வேறு பழவபற்பம்

எண்சீர் விருத்தம்.

கேளப்பா பவழமது பலந்தா னென்று
  கெட்டியாம் பீங்கானி னறுக்கிப் போடும்
வேளப்பா பழச்சாறு விட்டு நீயும்
  விருதான நாழிகைதா னறுப தானல்
நாளப்பா கழுவியதை யெடுத்துக் கொண்டு
  நலமான கர்ப்பூர சிலாசத் துத்தான்
தாளப்பா சமனுகக் கல்வத் திட்டுச்
  சார்வான பிரண்டைச்சா றதனு லாட்டே.

ஆட்டியே நாற்சாமம் பில்லை தட்டி
  யப்பனே ரவியுலர்த்தி யோட்டின் மூடி
நாட்டியே முழபுடஞ்செய் நீறும் பாரு
  நன்ருகப் பின்னுமந்தச் சாற்ரு லாட்டிக்
காட்டியே ரவியுலர்த்திப் புடத்தைப் போடு
  கருவான புளியாரைச் சாற்ரு லாட்டி
நீட்டியே யிருசாம மரைத் துலர்த்தி
  நினைவாகப் புடம்போடு பற்ப மாமே.

ஆமப்பா பணவெடைதான் வெண்ணெயிலே கொள்ள
  அடங்காத மேகமெல்லா மகன்று போகும்
வேமப்பா வெனும்புருக்கி யத்தி மேகம்
  விருதான மதுமேக மெட்டும் போகும்
தாமப்பா தேனிலே கொண்டா யானல்
  சகலாண மேனூறல் தவறிப் போகும்
தாமப்பா வாயுவெல்லாங் கீழே நோக்கும்
  தப்பாது மேகத்தின் றினவு போமே.

1. மன்மதன் போனுஞ்சிறந்த அழகினையுடைய மாணுக்கனே! நான் உனக்குப் பவழபற்பம் செய்கிற விதத்தைச்சொல்லுகிறேன் கேள். ஒருபலம் நற் பவழத்தை ஒன்றிரண்டாக நறுக்கிக் கெட்டியான பீங்கானில் போட்டு அதில் அந்தப் பவழம் மறையும்படி எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒருபகலும் ஒருஇரவும் கூடின அறுபது நாழிகைவரைக்கும் ஊறவைக்க வேண்டும். அப்படி யூறின பவழத்தை மறுநாள் காலையில் எடுத்து தண்ணீர் விட்டு நன்ருய்க் கழுவவேண்டும். இப்படி செய்வதால் பவழம் மலின நீங்கும். அப்படி மலினம் நீங்கின பவழத்தின்

எடைக்குச் சரியாகக் கர்ப்பூர சிலாசத்தும் நிறுத்தெடுத்து இரண்டையும் நன்றாயுள்ள கருங்குழிக் கல்லிலிட்டு நற்பிரண்டை பிடித்துப் பிழிந்த சாறுவிட்டு அரைக்க வேண்டும்.

2. ஒருபகல்நேரமான 12-மணி காலம்வரைக்கும் (காலை 6 மணியிலிருந்து மாலை 6-மணிவரைக்கும்) ஏற்பட்ட 4-சாமம் வரைக்கும் நன்றாய் மெழுகாகும்படி அரைத்துப் பில்லைதட்டி, பில்லை நன்றாய்க் கலீரென்று ஒலிக்கிறவரைக்கும் வெயிலில் உலர்த்தி (அவ்வாறு உலர்ந்த மறுநாள் காலையில்) அப்பில்லையை ஒருஓட்டில் வைத்து மேலே ஒரு ஓடு சுற்றளவு சரியாய்ப் பொருந்தும்படி மூடி மண்சீலை செய்து அன்று முழுமைக்கும் வெயிலிலுலர்த்தி மறுநாள் காலையில் வலிமையான வறட்டி நாற்பதில், இருபது வறட்டி அடியில் அடுக்கி அதின்மேல், சீலைசெய் துலர்த்தியிருந்த அகலைவைத்து அதின்மேல் மற்ற இருபது வரட்டியையும் ஒடுக்கி நெருப்பிட வேண்டும். பிறகு அந்தத்தீயானது பனிக்கட்டியைப்போல் குளிர்ந்த பிறகு அந்தஅகலை எடுத்துப்பிரித்துப் பார்த்தால் அந்தப்பில்லையானது நீறியிருக்கும் மறுபடியும் அந்தப் பில்லையைக் குழிக்கல்லிலிட்டு அந்தப்பிரண்டைச்சாற்றினாலேயே பழையபடி ஒருநாள் அரைத்துப் பில்லை தட்டிபழையபடியேயுலர்த்தி பழையபடியே மண்சீலைசெய்து உலர்த்திமுன் போலவே 40-வறட்டியில் புடம் போட்டு நன்றாயாறினபின் பிரித்தெடுத்து மறுபடியும் குழிக்கல்லி லிட்டுப் புளியாரைச் சாறு விட்டு இரண்டுசாமம் என்று சொல்லப்படும் ஆறுமணிநேரம் வரைக்கும் அரைத்து பழையபடியே பில்லைதட்டிப் பழையபடியே உலர்த்தி பழையபடியே அகலிலிட்டுச் சீலைமண் செய்துலர்த்தி பழையபடியே 40-வறட்டியில் புடம்போட்டு நன்றாயாறின பின் பிரித்துப் பார்த்தால் நன்றான வெண் பொடியாம்.

3. இப்படி முடித்துக் கையிருப்பாக வைத்துக்கொண்டிருக்கும் பவழ வெண்பொடியில் ஒருபண வெடையளவு எடுத்துப் பசு வெண்ணெய் கொட்டைப் பாக்களவில சேர்த்துக் கலந்து (10 - நாள் 2-வேளையும்) சாப்பிட்டால் எந்த மருந்துக்கும் அடங்காமலிருக்கிற மேக நோய்களெல்லாம்நீங்கும், எலும்பையுருக்கி யிளைக்கச் செய்து கெடுக்கிற எலும்புருக்கி நோயும், தித்திப்பு மேகமும் நீங்கும்.

(இன்னும் வரும்) மா. வடிவேலு முதலியார்.

சோதிட கலா நிதி

(236-ம் பக்கம் தொடர்ச்சி)

எழுந்த நற்சோதி யிரணிய கருப்பனுறையுளா யாவரும் யாரும், தொழுந்தகு முத்தர்புகும் வழியாகுஞ் சுடரவன் மண் டலத் தடைந்து, செழுங்கனற் பிழம்பாமுக்க ணெம்பெருமா ன்றிருவருள் பெற்று வேறின்றி, யழுங்கலில் சிவமாந்தன் னுரு த்தானுயமர்ந் துயரின்ப முற்றதுவே.

என கூர்மபுராணம், இந்திரத்துய்மண் முத்தியடைந்தவத் தியாயம் 47-ம் கவியில்,'இந்திரத்துய் மனுகிய ஜீவன்முத்தனது மெய்பினின்றும் எழுந்த சோதிப்பிழம்பானது சூரிய மண்டல த்திற் புகுந்து சிவனது திருவருளுருவாய் விளங்கி, அதனேடு அத்துவிதப்பட்டு இன்பமுற்றது' என்று கூறப்பட்டுள்ளது. இரணிய கருப்பனென்றது ஈண்டு சிவசூரியனை என்க. பர்க்கன் என்று காயத்திரியில் காணப்படுகின்றது. இரணிய கருப்பன் என்பதற்கு இச்சாஞானக் கிரியைகளை யுடையவன் என்பது பொருள். இத்திருநாமம் சிவபெருமானுக் குண்மை, "உறை விராட்டிரணிய கருப்பனுற்றுற...குறைவிலா விச்சுவனென்றுங் கூறு வர்" என்னும் வாயுசங்கிதைச் செய்யுளானுணர்க. அன்றியும் "யத்ரா ஸௌகேஸாந் தோவிவர்த்ததே" என்றற் றொடக்கத்துத் தைத்திரியோப நிடதச் சுருதியின்படி உரோமத்தின் வேர் பிரி யுமிடத்தில், அவன் றலையில் இருபக்கங்களையும் பிளந்து, பூ, என்று கூறி அக்கினியிற் பிரவேசித்து, புவ என்றுகூறி வாயுவி ற்பிரவேசித்து, சுவ என்று கூறிச் சூரியனிற் பிரவேசித்து மஹ என்றுகூறி * பிரம்மத்திற் பிரவேசித்து அங்கேசுவ ராஜ்யத்தை அடைகின்றுன். எனவே பிரம்ம பிராப்தியானது, ஒளிமார்க்க த்தை அடையப் படுவதாகப் பெறப்படுகின்றது. ஆகலின் சிவ ப்பிராப்திக்குச் சூரியமார்க்கம் நியமமாம்.

---

* இப்பிரகரணத்தில் கூறப்படும். பிரம்ம சப்தம் சிவபெரு மானையே குறிக்கும். "ப்ருஹத்வாத் ப்ருஹ்மணத்வாச் சசிவோப ரஹ்மைமபேயாகத:" என்ற பராக்கியை வாக்கியத்தானும், சிவ வதனம் என்பதற்கு "பஞ்சப்ரஹ்மவக்த்ரம்" எனப்பிரயோக மிருத்தலினுலும், சிவசக்திக்கே பிராஹ்மி எனப்பெயரிருத்தலி னுலும், அப்பிராஹ்மி சக்தியைத் தாதான்மியமாக வுடைய சத் தனே பிரஹ்ம மாகலினுலும்; பிரஹ்மசப்தத்திற்குச் சிவபெரு மானே யெனக்கோடலே சுருதி சம்மதம்.

த்வாவி மௌபுருஷோ லோகே ஞுர்யமண்டல பேதிநௌ
பரிவ்ராட் யோகயுக்தஸ் சரணே சாபிமுகோ ஹத

என்ற சுருதி வசனமும் உளது. சந்தான தீபிகையில்,

அஹம்சூர் யோநிலா நாதஸ், ஸம்மாஹே யோகுஹ: ஸ்ம்ருத:
நாராயணோ புதஸ்சைவ, பத்மஜோ குருருச்யதே
சுக்ரஸ்ஸசீப திஸ்சைவ, யமஸ்சூர்யாத் மஜஸ்ததா
ராஹுர்பூத் வாசித்ரகுப்தர், காலஃ கேதுர் நவக்ரஹா:

என கூறப்பட்டிருப்பதனால் சிவபெருமான், பராசக்தி, சிவசுப்பிரமண்ணியர், மகாவிஷ்ணு, பிரம்மா, தேவேந்திரன், யமன், காலன், சித்திரகுப்தன் முதலானோர், முறையே சூரியாதி கிரகமண்டல அதிஷ்டான தேவதைகள் என விளங்காநிற்கும். பிரம்மாண்ட புராணம் அயக்கிரீவ அகத்திய சம்வாதாத்தியாயத்தில், லலிதாரகஸ்ய சகஸ்திர நாமத்தில், "சந்திரமண்டல மத்திய காயை நமஃ" என கூறியிருத்தலால், சந்திரமண்டலாதிஷ்டான தேவதை பராசக்தி யெனக்காண்க. "சுடர் முதலாம் நவக்கிரக மவர்க்கதி தேவதைகளென சொல்லு மீசன். உமை முருகன் மான் மறையோன் உம்பர்கோனிய மனடலோங்கு காலன், கமை யெறு சித்திரகுப்தனுக" என மச்சபுராணம் சாந்திகிரகயஞ்ஞவிதி யத்தியாயங் கூறுவதூஉங்காண்க. சந்தான தீபிகையில், "காலஃ கேது" என்றுளது தவறு. "சித்ர குப்தாத்மனேநம:" என பிரம்மாண்ட புராணத்துட் கேதுவஷ்டோத்தரங் கூறுமாற்றால் இராகுவுக்குக் காலனும், கேதுவுக்குச் சித்திரகுப்தனு மதிதேவதைக ளெனக் கொள்வதே நியமமாம். இக்கிரமம் குமாரசுவாமியத்திற்கும், வீமேசு வரத்திற்கும் ஒற்றுமையானது. ஏனை நூற்களில் சொற்ப வித்தியாசத்துடன் கூறி இருக்கின்றமையால், மேற்கூறிய கிரமமப்படியே திருத்திக் கொள்வது அறிஞர் கடமையாம்.

மாயையொடு விரவுமந்த சிவத்தினின்றும் பழுதைமா சுணமே
வாயவபஞ்சீ கிருதசூக்கும வாகாயமுமற்றதி னிருந்து [போல
வாயுமற்றதினழலு மதிற்சலமு மதினிருந்து வயங்குமண்ணும்
பாயவபஞ்சீ கிருதமாகவே யம்மாவுற்பத்தி யான.

என சூதசங்கிதை எக்கிய வைபவ காண்டம் தைத்திரீய வுபநிடத தாத்பரிய முரைத்தவத்தியாயம் 9-ம் கவி கூறுமாற்றால், அவ்வியக்த சிருஷ்டியினுள் பஞ்சபிரம்மமே, வியக்த சிருஷ்டியினுள் பஞ்சபூதாத்மக ஞனர். எங்ஙனமெனில்,

(இன்னும் வரும்)

வித்வான்-வ-கு. வேலு நாயகர்,
பாலசோதிடர், வேலப்பாடி.

திருக்கச்சி நெறிக்காரைக் காட்டுச் சோழ சிலாசாசனங்கள்

(இரண்டாம் புத்தகம்-326-ம் பக்கம் தொடர்ச்சி)

(மாப் பெரும்புகழ் வளர்த்த கோப்பர கேசரி வந்மாரன உடையார் ஸ்ரீ ராஜே * ந்திர தேவற்கு யாண்டு 8-வது நாள் 302-ல்.)

ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயில் கோட்டத்து நகரம் காஞ்சிபுரத்து திருக்காரைக் காடுடையார் தேவதானம் ஊற்றுக்காட்டுக் கோட்டத்து தமனூர் நாட்டு அவ்வூரோம் கையெழுத்து ✕ ... ...

கருவில் தென்மேல் விநாயகரின் கீழ் வரியில் மேற்கில் ஆரம்பம்:—

? ....செயங் கொண்டு போர்க்களத்து........திரை யும் பெண்டிர் பண்டாரமும் கொண்டு விஜையாபிஷேகம் பண்

---

* ஸ்ரீ ராஜேந்திர தேவற்கு என்பதில் முன் 11-ம் சஞ்சிகையில் 326-ம் பக்கத்தில் ராஜே (முக்கால்) தேவற்கு என்றிருப்பது "ஸ்ரீ ராஜேந்திர தேவற்கு" என்றிருத்தல் வேண்டும்.

✕ இதன் தொடர்ச்சியான சாசனம் இக்கோயில் கர்ப்பக்கிரகத்தில் பிரமதேவரின் கீழ் அதாவது குமுதப் படையில் உள்ளது. அது நன்கு புலப்படாவண்ணம் சுண்ணம்பினால் எழுத்துக்கள் மூடப்பட்டிருத்தலால் மற்றோர் சமயம் எழுதி அனுப்புகிறோம்.

? இச்சாசனம் கொண்ட வரியை இப்போது புதுப்பிப்போர் எழுத்தற வெட்டிவிட்டனர். ஆகையால் நன்கு விளங்கவில்லை. இக்காலத்தில் பழங்கோயில்களைப் புதுப்பிக்கவரும் தருமப்பிரபுக்கள் பழங்கோயில்களிலுள்ள சாசனங்கள்கொண்ட கற்களவர்களை நமதிஷ்டப்படி இடித்தும அக்கற்களை வேற்றிடம் போக்கியும், அல்லது மண்ணுள் புதைத்தும், அல்லது, எழுத்துக்களை அறவெட்டிச் கொத்திப் புதுப்பித்தும், அல்லது ஆங்காங்கே புதுகற்களை வைத்தும் புதுக்கட்டடமாக்கி விடுகிறார்கள். அந்தோ! இதுதானோ சாசனக் கர்த்தர்களின் கருத்து. நமது நாட்டுப்பூர்வகால நாகரிகங்களையும், ராஜாக்களின் வீரச் செயல்களையும, அவர்கள் அரசியலையும், தர்ம பரிபாலனங்களையும், பிற்காலத்து மக்கள் நன்கு படித்து உணரவேண்டியன்றோ

ணி வீரஸிம்மாஸநத்து வீற்றிருந்தருளிய கோப்பர கேசரிவந் மரான உடையார் ஸ்ரீராஜேந்திர தேவற்கு (யாண்டு .... (எயில் கோ)ட்டத்து நகரங் காஞ்சிபுரத்து திருக்காரைக் காடு டைய மகா தேவர்க்கு வல்லவரையர் இந்திர எதேவர் முதல் சுண ச்சூ ஒற்றியூர் நிம்பங் வைத்த திருநந்தா விளக்கு அரை (½-விள க்கு) இவ்விளக்கு அரைக்கு வைத்த சாவா மூவா பேராடு நாற் பத்தைஞ்சும் இந்த ஆடுநாற்பத்தைஞ்சுங் கொண்டு.........இத் தேவர் பண்டாரத்து அளக்கக் கடவோமாகவும்................

(2-வது வரி).........இத்தென் கோயிலான் தொப்பநேன் இவர்கள் வேண்ட எழுதினேன் மாதன் திருக்காரைக் காடுடை யான். ... ...

கருவில் வடக்கில் கிழக்குபக்கத்தில் (நான் முகப்பிரம்ம தேவரின் கிழக்கில் சுவரில் உள்ளது.) சுவஸ்திஸ்ரீ திருப்புவன

அக்காலத்து ராஜக்கள், கற்றோரும் மற்றோரும் ஒருங்கு கூடும் படியான கோயில் முதலான பொது இடங்களில் தங்கள் தர்ம சாசன விளம்பரங்களை வெட்டிவைக்கலானார்கள். அக்காலத்து கோயில்களைப் புதுப்பித்தால் சாசனங்களை ஓலை ஏடுகளில் எழு திக்கொண்டு கோயிற்றிருப்பணி பூர்த்தியானதும் அச்சாசனங் களை முறையே பொறித்தல் வழக்கம் அஃது இக்காலத்து அற அற்றுப் போயிற்று. ஏன்! அவைகளின் உண்மைகள் தெரியா தது தான் காரணம் இத்திருக்கைய்யா லீச்வர கோயிற் கல் வெட்டுகளும் அவ்வாறே மறைந்துபோயிருக்கும். ஆனால் யாம். கூடிய மட்டும் ஊக்கங்கொண்டும் அக்கோயில் தருமபரிபாலக ர்களில் ஒருவராக இருத்தலினாலும் அவ்வெழுத்துக்கள் மறை யாவண்ணம் உய்யநேர்ந்தது. ஷை தேவஸ்தான கிராமங்களைப் பற்றி மற்றோர் சஞ்சிகையில் நன்கு விளங்க எழுதுகிறோம். ஷை தேவஸ்தான கிராமத்தில் குடி வளம் பெருக்கவைக்க ஷை கிரா மசுரோத்திரியதார் அனுமதிபெற்ற ஸ்ரீமான் முகுந்தகிரி தேசிகா சாரியார் எனும் ஒரு ஸ்ரீவைஷ்ணவ பிராம்மணவித்வத் சிரோன் மணி என்பார் அநேகருக்கு வீடுகள் கட்ட சாமான்களையும் இனமாக உதவியும் தம்பெயரால் "தேசிகர் அக்ராரம் என ஒரு அக்ராரம் ஸ்தாபிக்க விரும்பி வீடுகள்கட்டி பிராம்மணர்களுக்கே இனமாக உதவியும குடி-வளம் பெருக்கி உள்ளார். ஷை கோயிலி ன்திருப்பணிகள் பூர்த்தியானதும் கும்பாபிஷேகமும் சீக்கிரம் நடை பெறும்.

சக்கரவர்த்திகள் * ஸ்ரீ அல்லுங் திருக்காளத்தி தேவர்க்கு யாண்டு (கரு.) (15-Years of his reign.)

உடையார் திருக்காரைக் காடுடைய நாயநுர் (நாயனுர்) கோயில்திருவாபரணமும்,திருமுட்டுகளும், கணவதி,தேவன்வகைகளில் திருக்கோயிலார் கல்லா லேருவன் மனிச்சர் மனையாயம் செதுசவது திருவாபரணம் வாங்குகையாலே கங்கை கொண்டான் திருமண்டபத்தில் சீமாகேசுரரும், இராஜவும், இப்பொன், பொன்னும் இக்கோயில் தானத்தாரை தண்டிய திருவாபரணங்கள் ஊகவும், திருமுட்டு ஊகவும் திருநடை மாளிகை சேகரன்றுனயனுர். திருமுகமும், மாகேசுரர் திருமுகமும் (மாகேசுரர் என்பது அன்று ஆலின் கீழிருந்து அறம்புரிந்த அருளாளராம் சிவபெருமானுக்கு ஒப்ப மானிடஜென்மாக்கள் உய்வண்ணம் குருபீட சிரேண்மணிகளாக வீற்றிருக்கும் பண்டார சன்னிதிகளுக்கும், மடாதிபதிகளுக்கும் பெயர் என்ப.) பண்டார ஓசையும் தருகையில் (மடாதீனத்தார்களின் கீர்த்திகளை முறையே எழுதி திருமுகமாக தருகையில் என்ப.)

---

* ஸ்ரீ அல்லுங்காளத்தி தேவர், 'திருபுவன சக்கரவர்த்திகள்' எனும் சிறப்புப்பெயர் வாய்ந்த ஓர் அரசர்போலும். இவர் தம் மெய்க்கீர்த்திகளை விளம்பரப்படுத்த வில்லையோ அல்லது மறைந்து போயிற்ரே விளங்கவில்லை இவர்தம் இராஜ்யவருஷம் 15-வது யாண்டில் இக்காஞ்சிநகரில் அக்கால் சிறப்புற்றிருந்த இத்திருக் கோயில் ஸ்ரீகாரியங்களையும் இக்கோயிலை அடுத்து தென்பால் விளங்கிய ஒருமடத்தின் இயல்புகளையும் கவனிக்கவும் இக்கோயிலைச்சார்ந்த திருவாபரணங்களையும் திருமுட்டுகளையும் சோதித்து வாங்கவேண்டி அக்காலத்து ராஜாக்கள் வீற்றிருந்து நியாய பரிபாலனம் செய்வதற் கென்றிருந்த ஒரு கங்கை கொண்டான் திருமண்டபம் எனும் மண்டபத்தில் குடிகளின்குறைகளைக் கவனிக்க இராஜாவும் தேவஸ்தான தர்மபரிபாலனங்களைக் கவனிக்க சீமாகேசுரரெனும் மடாதிபதிகளும்ஒன்று சேர்ந்து இக்கோயில் திருவாபரணங்களின் தொகையையும், திருமுட்டுகளின் தொகையையும், திருநடை மாளிகை சேகரன்று னயனுர் எனும் மடாதிபதியின் திருமுகமும் (பட்டோலை) இவ்வூர் மடங்களிலுள்ள மாகேசுரரின் திருமுகங்களும்,மற்றும் பண்டார சன்னிதிகளின் கீர்த்திகளைக்கொண்ட திருமுகமும் தருகையிலே "நறு அணாஞ்சான் திருமடம்" எனும் பெயரிய இத்திருக்கோயிலின் தென்பாலுள்ள ஒருதிருமடத்தில்சீர்காழித்

(இன்னும் வரும்)

சா-அ. நடேசசெட்டி,
செட்டித் தெருவு, சின்ன காஞ்சிபுரம்.

பலவகைக் குறிப்புகள்

இந்தியாமந்திரி மிஸ்டர் மாண்டேகு தமது சகாக்களுடன் க்ஷேமமாய் லண்டன்போய்ச் சேர்ந்துவிட்டார் என்று ராஜப் பிரதிநிதிக்குத் தந்தி சமாச்சாரம் கிடைத்திருக்கிறது.

இம்மாதம் 21-ந்தேதி செவ்வாய்க்கிழமை சென்னையில் கூடுவதாயிருந்த மாகாண யுத்த கான்பரன்ஸ் ஏதோ சில காரணங்கள் பற்றி ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. கான்பரன்ஸ் கூடுந் தேதி பின்னிட்டு அறிவிக்கப்படும்.

ஐக்கிய மாகாண வாசிகளில் 6-பேர் சைன்யத்திற்கு ஆள் சேர்க்கப் பெரிதும் பாடுபட் டுழைத்ததைக் கருதி, அவர்களுக்குத் தற்கால ஏற்பாடாய் 2 வது லெப்டினண்ட் என்ற கௌரவ ராணுவ பதவியை அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் முதன் மந்திரி சில தினங்களுக்கு முன் ராஜப் பிரதிநிதிக்கனுப்பிய செய்தியை அனுசரித்து, டில்லி மாகாணச் சங்கத்தைச் சேர்ந்த 14-அங்கத்தினர்கள் தாங்கள் சைன்யத்தில் சேர்ந்து ராணுவப் பயிற்சிபெறத் தயாராயிருப்பதாய் சீப் கமிஷனருக்கு அறிவித்திருக்கிறார்கள். அவர்களில் நால்வர் பாரிஸ்டர்கள்.

லாகூர் மே 4-ந்தேதி நடந்த யுத்த கான்பரன்ஸில் தீர்மானிக்கப் பட்டபடி, கனம் ஜஸ்டிஸ் ஷாதிலாலைத் தலைவராகவும், ராஜா நரேந்திரநாத், பக்ஷி ஸோஹனப்லால் முதலியவர்களை மெம்பர்களாகவும் கொண்டு காப்புச்சேனைக்கு ஆள்சேர்க்கஒரு கமிட்டி நியமிக்கப்பட் டிருக்கிறது, கனம் பஸ்லி ஸையனும் கனம் ஷாபியும் மேற்படி கமிட்டியில் நியமிக்கப்படலாம்.

நேற்று முன்தினம் மாலை பம்பாயில் ஜி ஐ. பி. ரெயில்வே தொழிற்சாலையாட்கள் தங்களின் நன்மையைக்கருதி தனிப்பட ஒருசங்கம் ஸ்தாபிக்கும்பொருட்டு மிஸ்டர் காஞ்சி துவாரகதாஸின் அக்கிராசனத்தின் கீழ் கூடினார்கள். வக்கீல் மிஸ்டர் ஜின்வாலா அச்சமயம், மேற்படி சங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டிய தன் அவசியத்தைக்குறித்துப் பேசியபோது ராஜீய விஷயங்களில் சங்கம் பிரவேசிக்காதென்றும், சுய ஆட்சி சங்கத்துக்கும் அதற்கும் சம்பந்தமில்லை யென்றும் தொழிலாளிகளின் பரஸ்பர க்ஷேமத்தை யுத்தேசித்தே சங்கம் ஸ்தாபிக்கப் படுவதா குறிப்பிட்டார்.

யுத்தத்துக்கு முன் ஏராளமான சணல் நார் பிறதேசங்களி லிருந்து ஜெர்மனிக்குப் போய்க் கொண்டிருந்தது. யுத்தம் ஆரம்பித்த பின் ஜெர்மனியில் சணல்நார் கிடைக்காததால், பல் லாயிரக் கணக்கான தொழிலாளிகள் வேலையில்லாமல் தவிக்க வேண்டி வருமென்று அறிந்து, ஜெர்மன் ரசாயன சாஸ்திர விற் பன்னர்களும் நூல் தொழில் நிபுணர்களும் தங்கள் விடா முயற் சியினாலும் உழைப்பினாலும் சணல்நாருக்குப் பர்த்தியாக மற் றொரு நூல் எடுக்கும் சாமானைக் கண்டு பிடித்துவிட்டனர். சணல் நாருக்குப் பதிலாக காகிதத்திலிருந்து ஜெர்மானியர்இப் போது நூலெடுத்து நார் தயாரித்து 15 ஆயிரம் தொளிலாளிக ளுக்கு சரியான வேலை கொடுத்து வருகின்றனர்.

ஸ்வாமிதரிசனத்தின் பொருட்டு கோயிலுக்குப்போவோர் திருட்டு எண்ணத்துடன் அங்கு போவதும் உண்டா? இரண் டொரு தினங்களுக்கு முன் பம்பாய்க் கடுத்த பாந்தராவில் கோவா வாசியொருவன் அங்குள்ள மாதாக்கோயிலுக்குப்போ யிருந்தான். காரியங்கள் முடியும் வரையில் அவன் பொறுமை யாய்க் காத்திருந்து, கடைசியாய் பலிபீடத்திலிருந்த யாசகப் பெட்டியை மெதுவாய் குலுக்கிப் பார்த்தான். அதில் ஒன்றுமி ல்லை. மற்றும் பக்கத்திலிருந்த சாமான்களை ஒவ்வொன்றுக் அப கரிக்கப் பார்த்தான். இவ்வாறு அவன் செய்துகொண்டிருக்கை யில் பக்கத்திலிருந்த கன்யாமடப் பெண்கள் அவனைத் திடீரெ ன்று சூழ்ந்துகொண்டு போலீசாருககு அறிவித்ததில் எதிரிக்கு 3-மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அவன் பழை ய திருடனாம்.

இந்தியாவில் பி. எ, எம். எ. முதலிய பரீட்சைகளில் தே றிப் பட்டம் பெற்றவர்களின் பிழைப்பை விட ஒரு கறவை மாடு வைத்துக் கொண்டிருப்பவன் எவ்வளவோ மேலானவன் என்று பொருள் படும்படி, சமீபமாய்க் கல்கத்தாவில் நடந்த ஜீவகாருண்ய சங்கப் பொருட் காட்சி சாலையில் ஒரு வேடிக் கையான படம் ஜோடித்து வைக்கப்பட்டிருந்தது. அப்படத் தில் தராசை ஒருவன் கையில் பிடித்திருப்பது போலவும், அத் தராசின் ஒரு தட்டில் பட்டதாரி யொருவனை வைத்து மற்றொ ரு தட்டில் கறவை மாடொன்றை நிறுத்தி வைத்திருப்பதுபோ லவும், கறவை மாடு மாத மொன்றுக்கு $37\frac{1}{2}$ ரூபாய்சம்பாதிக்க பட்டதாரி 36 ரூபாய்க்குத் தாளம் போடவேண்டியிருக்கிறதெ ன்றும் பார்ப்போர் மனதில் பதியும்படி படம் எழுதப்பட் டிருக்கிறது.

சுதேசமித்திரன்.